Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம். பிலவ புரட்டாசி 18ஆம் நாள் | ரபி ஆகிர் 23 | (4-10-61) | புதன்கிழமை | இதழ் 199

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெதனியா.

# செனட்டர் தெரிவு

## அபேட்சகர்கள் தீவிர முயற்சி

### அரசாங்க கட்சிக் குழு இறுதி முடிவு செய்யும்

கொழும்பு, செவ்வாய்

இம்மாத மத்தியில் நடைபெறவிருக்கும் செனட்டர் தெரிவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி விரைவில் நடைபெறவிருக்கும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டத்தில் இறுதி முடிவு செய்யப்படும்.

பிரதமமந்திரியால் செனட்சபைக்கு நியமிக்கப்படவிருக்கும் இரண்டு ஸ்தானங்களுக்கு எவரை நியமிப்பதென்பது பற்றியும் இதே கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

செனட்டில் காலியாகவிருக்கும் ஸ்தானங்களுக்குமுன்னூற்றுக்கு மேற்பட்டோர் மனுச் செய்துள்ளனரென்றும் இவர்களில் பலரின் பெயரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைகளினல் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. மற்றும் பலர் தனிப்பட்ட முறையிலும் மனுச் செய்துள்ளனர்.

இம்மாதத்தில் செனட்சபையில் பத்து ஸ்தானங்கள் காலியாகின்றன. இவற்றில் ஐந்து ஸ்தானங்களுக்கு அரசாங்கம் செனட்டர்களை நியமிக்கும். மற்றும் மூன்று ஸ்தானங்களுக்கு அரசாங்கக் கட்சி மூன்று செனட்டர்களைத் தெரிவு செய்யக்கூடியநிலையிலிருக்கும்.

#### யு. என். பி. யும் தமிழரசுக்கட்சியும்

மற்றும் இருசெனட்ஸ்தானங்களில் ஒன்று யு. என். பி. தெரிவுசெய்யக் கூடுமென்றும் மற்றது தமிழரசுக்கட்சியினரால் தெரிவுசெய்யப் படக்கூடுமென்றும் தெரியவருகிறது. செனட்டர் தெரிவுக்குமுன் தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் விடுதலை செய்யப்பட்டுவிடக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

## சுதந்திரக் கட்சி மகாநாடு

### டிஸம்பரில் நடைபெறும்

கொழும்பு, செவ்வாய்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாட்டை டிசம்பர்மாதம் 2-ந் 3-ம் திகதிகளில் இரத்தினபுரியில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியின் இணைக்காரியதரிசிகளுக்கு அறிவித்துள்ளார்.

இந்த மகாநாடு கடந்த மார்ச் மாதத்தில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனல் சில காரணங்களால் இது பின் போடப்பட்டது.

## பஸ் விபத்தில் ஒரு பெண் பலி; 10 பேருக்கு காயம்

கொழும்பு, செவ்வாய்

மற்ஜேர் வாகனத்தை இழுத்துச்சென்ற ஒரு பஸ், குழி ஒன்றில் விபத்துக்குள்ளாகியதால் 5 பிரயாணிகள் கம்பகா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஒரு பெண் ஸ்தலத்திலேயே மரணமானர். மற்றும் ஐவர் படுகாயங்களுடன் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## வருடாந்த கலைக் கண்காட்சி

கொழும்பு, செவ்வாய்

இலங்கைக் கலைக்கழகம் வருகிற டிசம்பர் மாதம், வருடாந்தரக் கண்காட்சி ஒன்றை நடத்தும். ஓவியம், சிற்பம், பாய்கள் ஆகியன இக்காட்சியில் வைக்கப்படும். கொழும்பு கலாபவனத்தில் ஒரு மாதம் இது நடைபெறும்.

## சுத்தானந்தபாரதி 18ந் திகதி வருகிறர்

நாவலப்பிட்டி, செவ்வாய்

மலாயாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இம் மாதம் 18ந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்கிறர்.

இம் மாதம் 18ந் திகதி கொழும்பு வந்து சேரும் சுவாமி சுத்தானந்தர் 19ந் திகதி கொழும்புவிவேகானந்த சபையார் அளிக்கும் வரவேற்புபசாரத்திலும் 20ந் திகதி புத்தளம் சைவசங்கத்தின் வரவேற்பிலும் 21ந் திகதி மாத்தளை சைவ மகாசபை கண்டி சைவ மகாசபையளிக்கும் வரவேற்பிலும் கலந்து கொள்வார்.

22ந் திகதி நாவலப்பிட்டிக்கு விஜயம் செய்யும் சுத்தானந்த பாரதியாருக்கு நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கத்திலும் உனுகலோயா, வெஸ்ரேல், தாமரவல்லித் தோட்டங்களிலும் வரவேற்பளிக்கப்படும். 23ந் திகதி தென்னகக்கும்புர சச்சிதானந்ததபோவதனத்தில் வரவேற்புபசாரம் 24ந் திகதி வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வரவேற்பிலும் 25ந் திகதி கிளிநொச்சி திருநெறிக்கழகத்தின் வரவேற்பிலும் கலந்துகொண்டபின் 26ந் திகதி யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அளிக்கப்படும் வரவேற்புபசாரத்தில் கலந்து கொள்வார். இம்மாதம் 27ந் திகதி சுவாமி சுத்தானந்தர் இந்தியாவுக்குப் பிரயாணமாவார்.

## ரஷ்யாவின் யோசனை

மாஸ்கோ, அக். 3

"நேட்டோ"வும் "வார்சா"வும் வலுத் தாக்குதல் ஒழிப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவேண்டுமென ரஷ்யா அறிவித்திருக்கிறது.

## 150 மைல் நடந்து செல்வர்

கொழும்பு, செவ்வாய்

ரேயல் விமானப்படையைச் சேர்ந்த 4 இளம் வீரர்கள் பதுளை வரையான 150 மைல் தூரம் நடந்துசெல்வதற்காகப் புறப்பட்டார்கள்.

இதுபற்றி இவர்கள் குறிப்பிடுகையில் கொழும்பிலிருந்து லண்டன்வரை நடந்துசெல்வதற்கான முயற்சியின் ஆரம்ப நடபடிக்கையே இது எனத் தெரிவித்தனர்.

கண்டி, நுவரேலியா, பண்டாரவளை, பதுளை ஆகிய இடங்களுக்குஊடாக இவர்கள் செல்வார்கள்.

இந்தக்கோஷ்டியில்,கே. தர்மலிங்கம், ஒஸ்வால்ட் ஜெயசிங்கி, ஆஸ்டின் டானியல், பொப்ஷெரிவ்டன் ஆகியோர் உளர்.

இவர்கள் வரும் சனிக்கிழமை பதுளையை அடைவார்களெனத் தாம் நம்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

## கமிட்டி அமைக்க மந்திரி வாக்குறுதி

கொழும்பு, செவ்வாய்

கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்களுக்கு இரவு உணவு வழங்குவதில் ஏற்படும் தாமதம் பற்றி விசாரித்தறிய மூவர் கொண்ட ஒரு கமிட்டியைத் தாம் அமைப்பதாக தற்காலிக தொழில் மந்திரி திரு. எம். பி. டி. இஸட். சிரிவர்த்தன தம்மைச் சந்தித்த 7 தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார். நேற்றிரவு துறைமுகத் தொழிலாளர் வேலை தொடங்கினர்.

## இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் ஸ்தம்பிதம்

### கொப்பரா விலை வீழ்ச்சி

கொழும்பு, செவ்வாய்

கொழும்புத் துறைமுகத்தில் 800 துறைமுகத் தொழிலாளர்கள் ஐந்து தினங்கள் வேலைக்குச் செல்லாமல் விட்டதாலும், மழை காரணமாகவும் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் ஸ்தம்பித்துவிட்டது.

கொப்பரா ஒரு கண்டி 127 ரூபாய் 50 சதமாகக் குறைந்துவிட்டது. 1947 ம் ஆண்டுக்குப் பின் இவ்வளவு மோசமாகக் கொப்பரா விலை வீழ்ச்சியடைந்தது இதுதான் முதல் தடவை.

துறைமுகத்தில் ரப்பர் குவிந்துவிட்டதுவழக்கமாகதேயிலையும்மற்றும்பொருள்களையும் ஏற்றிச்செல்லும் இரண்டு கப்பல்கள் சென்றவாரம் சரக்கு ஏற்ருமல் சென்றுவிட்டன. இப்பொழுது துறைமுகத்துக்கு வெளியே 20 கப்பல்கள் காத்து நிற்கின்றன. ரப்பர், கொப்பரா, தேயிலை, தேங்காயெண்ணெய் ஆகிய ஏற்றுமதிப்பொருள்கள் பெருமளவில் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

## சட்டபூர்வமாக விவாகமாகாத தம்பதிகள்

### சேதவத்தையில் அதிகமாக காணப்படுகின்றனர்

கொழும்பு, செவ்வாய்

சேதவத்தையிலுள்ள ஒரு சேமநல சங்கம் நடத்திய கணக்கெடுப்பின் விளைவாக அங்குள்ள பெரும்பாலான தந்தைமார்களும் தாய்மார்களும் சட்டபூர்வமாக விவாகம் செய்யவில்லை என நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் மட்டும் 17 சட்டரீதியாக விவாகமாகாத தம்பதிகள் குழந்தைகுட்டிகளுடன் வசிப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சட்டவிரோதமாகப் பிறந்த 85 குழந்தைகளும் அங்கிருக்கின்றனவாம்.

இந்த விவாகங்களைச் சட்டபூர்வமாக்குவதற்கான ஏற்பாடுகளை விவாகப் பதிவு அதிகாரியின் மூலம் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர்மீது

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது

### திரு. இராசரத்தினம் புதிய தலைவரானர்

மாவிட்டபுரம், செவ்வாய்

காங்கேசந்துறை பட்டினசபை தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய தலைவராக திரு. ஏ. இராசரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு. ஆ. வ. சதாசிவம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்காக சபையின் விசேஷ கூட்டம் உதவி ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் ஏ. ஏ. ஜோசப் தலைமையில் இன்று காலை நடைபெற்றது.

ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட இச்சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. எம். கார்த்திகேசு, திரு. ஏ. இராசரத்தினம், திரு. எஸ். சிவனடியார், திரு. பி. இமானுவல் ஆகிய நால்வரும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

பட்டின சபைத் தலைவர் திரு. சதாசிவமும் நான்காம் வட்டார அங்கத்தவர் திரு. டி. கனகசபையும் சபைக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானமும் பதவி நீக்கத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதும் புதிய தலைவர் தெரிவு நடைபெற்றது.

புதிய தலைவர் பதவிக்கு திரு. இராசரத்தினத்தின் பெயரை திரு. சிவனடியார் பிரேரித்தார். திரு. இமானுவல் ஆமோதித்தார். திரு. இராசரத்தினம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

இன்றைய கூட்டத்திற்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை.

## வாடகைக்கு

சிறு வியாபாரமோ, கைத்தொழிலோ நடாத்தக் கூடிய இரு அறைக் கடையும் அத்துடன் இணைந்த தங்கும் விடுதியும் வாடகைக்கு உண்டு ஆண்கள் மட்டுமே தங்க வசதி உண்டு. விபரத்திற்கு: எஸ், வேலுப்பிள்ளை, வியாபாரம், 478, கே. கே. எஸ். வீதி, (சிவலிங்கப்புளியடி), யாழ்ப்பாணம்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## தரகர்களை நீக்க மந்திரி நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் கொள்ளைலாபமடித்து வரும் தரகர்களை நீக்குவதற்கு வழிவகுப்பதென இணைக்கமிட்டியொன்றை நியமிக்கவேண்டும் என்று, காணி, விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா தீர்மானித்துள்ளார்.

உத்தரவாத விலைத்திட்டம் சரியான முறையில் செயல்படவில்லை என்றும் தமது பகுதிகளில் தரகர்கள் கமக்காரர்களைச் சுரண்டிவருகிறார்களென்றும் பார்லிமெண்ட் பிரதிநிதிகள் பலர் காணி விவசாய மந்திரிக்கு முறையிட்டதன்பேரில் மந்திரி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். உத்தரவாத விலைத்திட்ட முறை முழுவதும் திருத்தியமைக்கப்படல் வேண்டும் என்று பிரதிநிதிகள் கோரியுள்ளார்கள். உத்தரவாத விலைத்திட்டம் கமக்காரர்களுக்கு லாபம் அளிக்கும்வகையில் அமைக்கப்படவேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

தரகர்களை நீக்க வழிவகுப்பதற்கென நியமிக்கப்படவிருக்கும் கமிட்டி அங்கத்தவர்களைக் காணிவிவசாய நீர்ப்பாசன மந்திரி மற்றைய எம். பிக்களுடன் கலந்தாலோசனை செய்து நியமிப்பார்.

## "தேசிய ஒற்றுமை கண்ட கவிஞன்"

### நெல்லியடியில் பாரதிவிழா

உடுப்பிட்டி, திங்கள்

"வானையளப்போம், கடல் மீனையளப்போம், சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்" என்று பாரதி அன்று தீர்க்கதரிசனமாகக் கூறியது இன்று யதார்த்தமாகிவிட்டது.

இவ்வாறு வெள்ளிக்கிழமை மாலை "பாரதி விதைத்த விதை" என்ற பொருள் பற்றி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற் சொற்பெருக்காற்றிய திரு. கே. சிவப்பிரகாசம் கூறினார். மாணவர் மன்றத் தலைவர் திரு. வி. தங்கேஸ்வரன் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பேசிய திரு' சிவப்பிரகாசம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய பெருமையும், சமுதாயச் சீர்கேடுகளை அஞ்சாது குத்திக் காட்டிய பெருமையும் புதிய சமுதாய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு, மக்கள் மனிதாபிமானத்துடனும் சமத்துவத்துடனும் வாழலாமென்று எடுத்துக் காட்டிய புகழும் சமுதாய சிற்பியாகிய பாரதிக்கே உரியவை என்றார்.

பாரதியார் பற்றிய கட்டுரை. கவிதைப் போட்டிகளிற் தெரிவு செய்யப்பட்டோருக்கு மேற்படி வித்தியாலய உப அதிபர் திரு. சி. தர்மலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

## தேசியசேவைத்திட்டம் அங்கீகாரம்

கொழும்பு, செவ்வாய்

வித்தியாதிபதி திரு. எஸ். எவ். டி' சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டாய தேசிய சேவைத் திட்டத்தைக் கல்வி மந்திரி ஜனாப். பதியுதீன் மாமூத் அங்கீகரித்துள்ளார்.

இதன்பிரகாரம் சகல ஆசிரியர்களும் 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களும் சமுக அபிவிருத்தி சேவைகளில் ஈடுபடவேண்டும்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சமுகசேவை செய்வதற்கான சேவை மனப்பான்மையை இவர்களிடையே விருத்தியடையச் செய்வதோயகும்.

வித்தியாதிபதி இதுபற்றித் தெரிவித்துள்ளதாவது:-

'சமுகநல சேவையில் ஆசிரியர்கள் காட்டும் ஊக்கத்திலேயே இந்தத் திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் உண்மையிலேயே இத்தொண்டு செய்வதில் ஆர்வம் காட்டாவிட்டால் அதிகம் கல்வியறிவில்லாதவர்கள் புதுவழியில் வாழமுற்படமாட்டார்கள்.'

ஒரு மாதத்தில் 4 சனிக்கிழமை நாட்கள் இவ்வித சேவைக்கென ஒதுக்கப்படவேண்டுமெனவும் ஒவ்வொரு ஆசிரியரும மாணவரும் மாதத்தில் ஒருநாளாவது இந்த சேவையிலீடுபடவேண்டுமெனவும் திட்டத்தில் காணப்பட்டிருக்கிறது.

## தமிழும் இருக்கவேண்டும்

கொழும்பு, செவ்வாய்

தமிழ்ப் பாடசாலைகளுக்கும் முஸ்லிம் தமிழ்ப்பாடசாலைகளுக்கும் அனுப்பப்படும் கடிதங்கள் யாவற்றிலும் தமிழ் மொழிபெயர்ப்பும் இருக்க வேண்டும் என்று கல்வி இலாகாவுக்கு கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மாமூத் உத்தரவிட்டுள்ளார்.

## பிரிட்டிஷ் உளவுப்புலி காரணம்?

கெய்ரோ, அக். 2

சிரியா புரட்சிக்குச்சிலதினங்களுக்குமுன் 'பிரிட்டிஷ்உளவுப் புலி' ஒருவர் டமாஸ்கஸிற்கு விஜயம் செய்திருந்ததாகவும் புரட்சி இயக்கத்துக்கு அவர் மூலகாரணமாக இருந்திருப்பதாக இப்பொழுது தெரியவருகிறதென்றும் எகிப்தின் ஒரு தினசரிப்பத்திரிகையான 'அல் அக்பர்' கூறியுள்ளது.

## வித்தியாதிபதிக்கும்..

(3ம் பக்கத்தொடர்ச்சி)

அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஆசிரியப் பண்புடன் ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

திரு. இ. சங்கரப்பிள்ளை நன்றி கூறினர்.

# சாப்பிட்டபின் நித்திரைக்கு சென்ற இளம் மனைவி

## கணவனிடம் தகவல்சொல்லாமலே மரணம்

### ஸ்தலத்தில் நீதவான் விசாரணை

மாவிட்டபுரம், செவ்வாய்

சுன்னாகத்தைச் சேர்ந்த கதிரவேலுவின் மனைவியான 19 வயது அன்னலெட்சுமியின் மரணம் சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அன்னலெட்சுமியின் கணவர் கதிரவேலு சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

ஐந்துவருடங்களுக்கு முன் அன்னலெட்சுமியைநான் மணம் முடித்தேன். எங்களுக்கு ஒரு குழந்தையிருக்கிறது. எனது பெற்றோர்தான் அன்னலெட்சுமியை சிறுவயதிலிருந்து வளர்த்துவந்தனர்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் வீட்டுக்கு வந்த சமயம் எனது மனைவி சமையல் செய்துகொண்டிருந்தார். பிற்பகல் இரண்டரை மணியளவில் நாங்கள் சாப்பாட்டை முடித்துக்கொண்டோம்.

பின்னர் மாலை ஆறுமணியளவில் அவர் எனக்கு தேநீர் கொண்டுவந்தார். நான் சாப்பாடுகேட்டேன். பின்னர் சாப்பாட்டை முடித்துக்கொண்டு இருவரும் நித்திரைக்குச்சென்றோம்.

இரவு பதினொன்றரை மணியளவில் சத்தம் கேட்டது. நான் எழுந்து பார்த்தேன். மனைவியின் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் நுரை வந்துகொண்டிருந்தது. நான் சத்தமிட்டேன். அயலவர்கள் வந்தனர். "என்ன நடந்தது?" என்று அன்னலெட்சுமிடம் கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லை. ஆஸ்பத்திரிக்குச் கொண்டுசெல்வதற்குப் புறப்பட்டபொழுது அவர் இறந்துவிட்டதை அறிந்தேன்.

சில தினங்களுக்கு முன் மகளின் கழுத்துச்சங்கிலியை, கடன் தீர்ப்பதற்காக விற்றேன். இதனால் அன்னலெட்சுமி கவலையடைந்திருந்தார்.

டாக்டர் அருளம்பலம்பிரேத பரிசோதனை நடத்தினர். தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

## ரயில் - கார் மோதல்

நாரம்பிட்டியா திங்கள்

நாரம்பிட்டியாநாவல லெவல் குரோசிங்கில் நேற்றுக்காலை ஒரு ரெயிலுடன் காரொன்று மோதி கார் தூக்கி எறியப்பட்டது.

ரெயில்வே கேட்டுகள் இல்லாததினாலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. இந்த விபத்தில் டிரைவருக்கு சிறிது காயம் ஏற்பட்டது. காரில் சென்ற மற்றவர்கள் காரை விட்டு இறங்கிவிட்டதால் தப்பிவிட்டார்கள்.

## சம்பந்தர் இல்லம் வெற்றி

வட்டுக்கோட்டை, செவ்

சென்ற சனிக்கிழமை மாலை அராலி இந்து ஆங்கில பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. சம்பந்தர் இல்லம் வெற்றியீட்டியது. மத்தியஸ்தர்களாகத் திருவாளர்கள் வே. செல்லத்துரை, பொ. செல்வக்குமாரசாமி, சி. முருகேசு ஆகியோர் உதவி புரிந்தனர். அதிபர் திரு. பொ. சபாரத்தினம் பரிசுகளை வழங்கினர்.

# ஈராக்-இலங்கை வர்த்தக ஒப்பந்தம்புதுப்பிக்கப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

'பொருளாதார அபிவிருத்திக்காகச் சகல ஆசிய நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்க வேண்டுமென நாம் நம்புகின்றோம். இந்த எண்ணத்தினாலேயே எமது பொருளாதார வர்த்தகத் தொடர்பை இந்த நாடுகளுடன் அதிகரித்துக்கொள்ள நாம் விரும்புகின்றோம்.

இவ்வாறு உணவு, வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன தெரிவித்தார்.

ஈராக் குடியரசுக்கும் இலங்கைக்குமிடையே சென்ற பெப்ரவரி 20-ம் திகதி கைச்சாத்திடப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தை நேற்று புதுப்பித்தபோதே மந்திரி மேற்கண்டவாறு கூறினர்.

வர்த்தக ஒப்பந்தம் புதுப்பிப்பதற்கான ஏற்பாடுகள் வர்த்தகப் போக்குவரத்து அமைச்சின் காரியாலயத்தில் நடைபெற்றன.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உணவு, வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரியும் ஈராக்குடியசின் சார்பில் ஈராக்குடியரசுஸ்தானிகர் ஜனாப். அல்சேய்ட் அப்துல்காதர் சுல்ஜின்லானியும் புதுப்பித்த ஒப்பந்தத்திற் கைச்சாத்திட்டனர்.

ஈராக் ஸ்தானிகர் பதிலளிக்கையில் ஈராக் தேசத்தில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது. இலங்கையில், எமது தேசத்துப் பொருள்களை வியாபாரம் செய்ய நாம் விரும்புகிறோம் என்றார்.

## உலகக்காடுகளின் தொட்டில்: பல நாடுகளுக்கு தாவரங்கள் விநியோகம்

ஹாம்பர்க், அக். 1

சிறு மரங்கள் அவற்றின் வேர்களுடன் நன்ருக "பார்சல்" செய்யபபட்டு உலகின் பல பாகங்களுக்கு இங்கிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன. இச்செடி கொடிகளை வளர்க்கும் நாற்றங்கால் பண்ணை ஹாம்பர்க் நகரின் வடகோடியில் அமைக்கப்பட்டுள்ளது. உலகிலேயே இம்மாதிரியான நாற்றங்கால் பண்ணை பெரும் அளவில் நடத்தப்படுவது வேறு எங்குமே கிடையாது.

இதன் மதிப்பு 6 கோடி ஜெர்மன் மார்க்குகளாகும். பல நாடுகளுக்கு செடி, மரங்களை இப்பண்ணை விநியோகித்து வருவதால் "உலகக் காடுகளின் தொட்டில்" என்று இது அழைக்கப்பட்டு வருகிறது.

செடி, கொடி, மரங்களை நல்ல முறையில் வளர்ப்பது, அதற்கு நோய் நொடி வராமல் தடுப்பது, ஒட்டு முறை மூலம் நல்ல ரகங்களைத் தயாரிப்பது ஆகியவை பிரமிக்கத்தக்க வகையில் இப்பண்ணையில் மேற்கொள்ளப்படுகின்றன.

காடுகள் அரிதான இப்பகுதியில் இவ்வளவு பெரும் அளவுக்கு இந்த நாற்றங்கால் பண்ணை எப்படி நடைபெறுகிறது என்று கேட்கலாம். இப்பண்ணை ஆரம்பித்து 150 வருடங்கள் ஆகின்றன என்பதே அதற்குப் பதில். எல்லாரக செடி, கொடி, மரங்கள் வளர இங்குள்ள பூமிச்சத்து மிக ஏற்றதாக இருந்ததே இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம். கடலிலிருந்து வரும் ஈரக்காற்றும் தாவர வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்கிறது. தாவரங்களை வளர்ப்பது பற்றிய அனுபவ முறைகள் தலைமுறை தலைமுறையாக பின்பற்றப்பட்டு வருகின்றன. உலகின் பல பாகங்களிலுள்ள தாவர வகைகள் எல்லாம் இங்கு சேகரிக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. சுமார் 370 ரகங்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு இங்கு வளர்க்கப்படுகின்றன.

முப்பத்தினன்கு நாடுகளில் இப்போது இருந்து வரும் காடுகள் இந்த நாற்றங்கால் பண்ணையிலிருந்து கிடைத்த தாவர வர்க்கங்களிலிருந்து உருவாக்கப்பட்டவை. ஸ்கான்டிநேவியா நாடுகளாக நார்வே, ஸ்வீடன், டென்மார்க், கானடா, யுனைடெட் ஸ்டேட்ஸ் (அமெரிக்க) தென்னாபிரிக்க, ஜப்பான், ஆஸ்திரேலிய ஆகிய நாடுகள் தாவர வர்க்கங்களை மேற்கு ஜெர்மனிவிருந்து வாங்குகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளான இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து மற்றும் ஆப்பிரிக்க தென்னமெரிக்காவிலுள்ள நாடுகள் மேற்கு ஜெர்மனியிலிருந்து தாவர வர்க்கங்களை இறக்குமதி செய்யவிருக்கின்றன.

ஒவ்வொரு வருஷமும் இந்த நாற்றங்கால் பண்ணையிலிருந்து 600 ரயில்வே டிரக் நிறைய மரங்களும் செடிகளும் ஏற்றி இதர ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. கடல் கடந்துள்ள நாடுகளுக்கு கப்பல்களிலும் இதே அளவுக்கு அனுப்பப்படுகின்றன.

மிகவும் அரிதான விதை ரகங்கள் விமானமூலம் அனுப்பப்படுகின்றன. வருஷத்திற்கு 80 லட்சம் விதைகள் இம்மாதிரி ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மிகவும் உயர்தரமான ரகங்கள் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுப்பப்படுகின்றன.

நோய் நொடியுள்ளவையோ, புழு பூச்சியால் பாதிக்கப்பட்டவையோ இந்த நாற்றங்காலிலிருந்து வெளியே அனுப்பப்படமாட்டாது. அவைகள் அங்கேயே அழிக்கப்பட்டுவிடும். தரமுள்ள தாவரங்களையே உலக நடுகளுக்கு விநியோகிப்பதே இந்த ஸ்தாபனத்தின் லட்சியமாகும்.

## தலைமை ஆசிரியர் நியமனம்

### கல்வி அமைச்சு யோசனை

கொழும்பு, செவ்வாய்

பாடசாலைகளில் காலியாகவுள்ள தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு நியமிப்பதில் 50 சதவீதமான ஸ்தாபனங்களுக்கு பதில் தலைமை ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று அரசாங்க சேவைக்கமிஷனுக்கு கல்வி அமைச்சு யோசனை கூறியுள்ளது.

இப்பொழுது நாட்டிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் சுமார் 200 ஆசிரியர்கள் பதில் தலைமை ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

கல்வி இலாகாவில் பத்து வருடங்களுக்குமேல் கடமையாற்றியவர்களும் முதல்தர பயிற்சிபெற்றவர்களும் இரண்டு வருடங்களுக்குமேலாக பதில் தலைமையாசிரியர்களாகக் கடமையாற்றியவர்களும் நிரந்தர சேவையில் நியமிக்கப்படலாமென்று கல்வி அமைச்சு அரசாங்கசேவைக் கமிஷனுக்குத் தெரிவித்துள்ளது.

## உணவுப்பொருள் விநியோகம்

### கூ. மொ. வி. ஸ்தாபனம் எடுத்துக்கொள்ளும்

கொழும்பு, செவ்வாய்

நாடுமுழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனிப்பட்ட வர்த்தகர்களுக்கும் உணவுப் பொருள்களை விநியோகம் செய்யும் பொறுப்பை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் எடுத்துக்கொள்ளும்.

இதற்காக கொழும்பிலும் மற்றும் வெளியூர்களிலும் 17,50,000 ரூபாய் செலவில், 80 விநியோகநிலையங்களை கூ. மொ. வி. ஸ்தாபனம் நிறுவும்.

# சிரியா நிலைமை—அரபுலீக்சபையை உடனடியாக கூட்ட டுனீஷியா கோரிக்கை

## 600 எகிப்தியர் வெளியேற்றப்பட்டனர்

டுனிஸ், அக். 3

ஐக்கிய அரபுக்குடியரசிலிருந்து புரட்சியின் மூலம் தனியாகப் பிரிந்துள்ள 'சிரிய அரபு குடியரசு' சம்பந்தமாக அரபு உலகில் தோன்றியுள்ள நிலைமைபற்றி ஆராய்வதற்கு அரபு லீக்கின் அரசியல் கமிட்டியை உடனடியாக அவசரமாகக் கூட்ட வேண்டுமென்று டுனீஷியா கேட்டுள்ளது.

இதற்கிடையில் சிரியாவிலுள்ள எகிப்திய இராணுவ, அரசாங்க அதிகாரிகளை எகிப்துக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை சிரியாவின் புதிய அரசாங்கம் துரிதமாகச்செய்து வருகிறது.

சிரியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட 600 எகிப்தியர் லெபனனின் தலைநகரான பெய்ரூட்டுக்கு வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் இங்கிருந்து கெய்ரோவுக்குச் செல்வர்.

பெய்ரூட்டில் ஜனாதிபதி நாஸருக்கு ஆதரவு தெவித்து நேற்று பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

சிரியாவின் புதிய அரசாங்கத்தை அங்கீகரித்ததால் ஜோர்டானுடனுள்ள ராஜீய உறவுகளை எகிப்து துண்டித்துக் கொண்டது. ஜோர்டான் தலைநகரான அம்மானிலிருந்த எகிப்திய ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்தவர்கள் காரியாலயத்தை மூடிவிட்டு கெய்ரோவுக்குப் புறப்படத் தயாராகிவிட்டனர்.

சிரியாவின் வடக்குப் பகுதியில் புதிய அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சி நடைபெற்று வருவதாகவும் ஆனல் இது பற்றி விபரமான செய்திகள் தமக்கு இன்னும் கிடைக்கவில்லையென்றும் ஜனாதிபதி நாஸர் நேற்று இரவு கெய்ரோவில் தெரிவித்தார்.

புதிய சிரியா அரசாங்கம் ஐ. நா. சபைத்தலைவருக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் ஐ. நா. சாஸனத்தின் கொள்கைகளை பின்பற்றி நடக்க சிரியா அரசாங்கம் உறுதி கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஐ. நா வில் அங்கத்துவம் கோரும் எந்த நாடும் இவ்விதம் உறுதிமொழி அளிக்க வேண்டுமென்பது ஒரு வழிஎன்று ஐ. நா. வட்டாரங்கள் தெரிவித்தன.

## 16 வது குண்டும் பரீட்சிக்கப்பட்டது

வாஷிங்டன், அக் 3

சோவியத் ரஷ்யா மற்றொரு அணுகுண்டை நேற்று பரீட்சை செய்ததாக அமெரிக்க அணு சக்திக் கமிஷன் அறிவித்துள்ளது. செப்டம்பர் மாதம் முதல் திகதி ரஷ்யா அணு ஆயுதப் பரீட்சைகளை மீண்டும் ஆரம்பித்ததிலிருந்து இது வரை 16 அணுகுண்டுகளைப் பரீட்சித்துள்ளது. 16 வது குண்டு ஆக்டிக் பிரதேசத்தில் பரீட்சிக்கப்பட்டது.

## வித்தியாபகுதிக்கும் ஆசிரியஉலகுக்கும் பொதுநோக்கு அவசியம்'

### ஆசிரியர் கூட்டத்தில் முன்னாள் வித்தியாதிபதி உரை

நீர்வேலி, செவ்வாய்

"வித்தியாபகுதி யாருக்கும் ஆசிரிய உலகத்துக்குமிடையே ஒரு பொது நோக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் கல்வியில் முன்னேற்றமுண்டாகும். இரு பகுதியாருக்குமிடையே சகோதரத்துவ மனநிலை ஏற்பட வேண்டியது அவசியம்."

இவ்வாறு வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய முன்னாள் வித்தியாதிபதி திரு. கே. எஸ். அருள்நந்தி கூறினர். இக்கூட்டம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சென்ற திங்கட்கிழமை மாலை ஆசிரியர் திரு. கே. அருணசலம் தலைமையில் நடைபெற்றது.

திரு. அருள்நந்தி தொடர்ந்து பேசியதாவது:

கூட்டங்களில் பேசுவதில் அதிக பலனெதுவும் கிடைப்பதாகத் தெரியவில்லை. எந்த விதமான அறிவுரையும் நிலையான நன்மையைத் தருவதாய் இல்லை. இந் நிலை மாறிச் சமுதாயத்தில் புதிய மாற்றம் ஏற்படல் வேண்டும்.

மாணவர்களிடையே பயிற்சியும், பெயர்ச்சியும் எதை நோக்கும் போதும் அதில் அவர்களுக்குப் பொதுத் தன்மையும், உளப்பான்மையும் பின்பற்றுவதில் வழிமுறையும் ஏற்படல் வேண்டும். இந் நிலையை ஆசிரியர்கள் உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். மாணவர்கள் பிழையை மீண்டும் அனுமதிப்பதால் அவர்களிடையே அது நிலைத்து நிற்கிறது. இதனைப் போக்கி நல்ல மாணவர்களை உருவாக்க ஆசிரியர் முயற்சி செய்ய வேண்டும். அத்துடன் நல்ல திட்டமிட்ட கல்வி முறையை வகுத்து மாணவர்களுக்குப் போதனை அளிக்க வழி செய்ய வேண்டும்.

தலைமை வகித்த திரு. கே. அருணசலம் தமது உரையில் தேசியமயக் கல்வித் திட்டம் அதனுடைய உரிய இலக்கை அடைய வேண்டுமென்றல் ஆசிரியர்களுக்குச் சுயாதீனமளிக்கப்படுவதோடு போதிய சலுகைகளும் கொடுக்கப்படல் வேண்மென்றும் அவர்களுக்குரிய குறைபாடுகளை நீக்கி அவர்கள் தம் மனதைக் கல்வி வளர்ச்சியில் மாத்திரம் செலுத்த அரசினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னர்.

குறைந்தது 6 மாதகாலம் தற்காலிகமாக கடமையாற்றிய ஆசிரியர்களது சேவாகாலத்தை அவர்களது சேவைக் காலத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். 10 வருட சேவையின் பின் கால்பங்கு பென்சனுடன் இளைப்பாறும் உரிமை ஆசிரியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர்களுக்கு முன்போல் அரசியல் உரிமை வழங்கப்படாத பட்சத்தில் தற்காலிக அரசியல் உரிமை வழங்கப்படல் வேண்டும். தொழில் நுட்ப வர்த்தக கல்வி விருத்திக்கு ஏற்ற வசதிகள் பாடசாலையில் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனக் கோரும் பிரேரணைகள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

திருமதி சத்தியமூர்த்தி, முதலியார் அத்தியார் அருணசலம் ஆகியோரது பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

தலைவர் திரு. கே. மகாலிங்கசிவம் பேசுகையில் ஜனநாயகத்தில் போட்டிகள் இடம் பெறுவது வழக்கமென்றும், ஆனல் இவைகள் ஒற்றுமைக்கு வித்திடவே உபயோகிக்கப்பட வேண்டுமென்றும், ஆசிரியர்களுக்கிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென்றும் இதற்கு

(2ம் பக்கம் பார்க்க)

## "சமாதானம் நிலவ சர்வோதய கருத்தை பரப்பவேண்டும்"

### காந்தி சேவா சங்கத்தில் திரு. நேசையா பேச்சு

உருத்திரபுரம், செவ்வாய்

"இலங்கையில், சிறப்பாக உலகில் சமாதானம் நிலவுவதற்குச் சர்வோதயக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப வேண்டும் என்று இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கு. நேசையா கிளிநொச்சியில் நடைபெற்ற அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் 12ஆவது ஆண்டுவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்". அவர் மேலும் கூறியதாவது:

"சர்வோதயம் எல்லோருடைய நன்மையையும் கருதுவதாகும். இவ்வரிய கொள்கையை வடக்கில் மாத்திரமின்றி தெற்கிலும் பரப்ப வேண்டும். இதற்கு அரியதோர் சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளது. தென்னிலங்கையில் சிரமதான இயக்க மூலம் சர்வோதயக் கருத்துக்களைப் பரப்ப முயலும் இச் சந்தர்ப்பத்தில் ஜனசக்தியைத் திரட்டி அக் கருத்தை மேலும் பரப்ப வேண்டும்".

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆபாச இலக்கியங்களை அரசாங்கம் தடை செய்ய முன்வந்ததை இச்சங்கம் பாராட்டுகின்றது. அத்துடன் ஆபாச சுவரொட்டி விளம்பரங்களையும் குறிப்பாக சினிமா சம்பந்தமான ஆபாச விளம்பரங்களையும் தடைசெய்யுமாறு அரசாங்கத்தை வேண்டிக்கொள்கிறது.

சர்வோதயக் கருத்துக்களைப் பரப்புவதற்காக, இக்கருத்தில் ஆர்வம் கொண்டவர்களோடு சிறப்பாக தென்னிலங்கையிலுள்ள சிரமதான இயக்கத்தினரோடு தொடர்பு கொள்ள வேண்டும்.

இல்லங்கள் தோறும் சர்வோதயத் தத்துவத்தைப் பரப்பவேண்டும்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் திரு. கு. நேசையா, உபதலைவர்கள் திரு. ச. சோமசுந்தரம், முதலியார் திரு. செ. சின்னத்தம்பி, கௌரவ பொதுக் காரியதரிசி திரு. சோ. க. தம்பிப்பிள்ளை, உபகாரியதரிசி திரு. சி. க வேலாயுதபிள்ளை, தனதிகாரி பண்டிதர் திரு. செ. துரைசிங்கம். ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப் பட்டது.

## "ஜாதி, மத, மொழி வாதங்களை அடியோடு ஒழிக்கவேண்டும்"

### பஞ்சாபில் நேரு அறைகூவல்

சண்டிகார், அக். 3

"ஜாதி வாதம், மொழி வாதம், பிராந்திய வாதம் ஆகிய தீமைகளை ஒழித்துக் கட்டுவதற்கு நாம் உறுதிகொண்டிருக்கிறேம்" என்று பிரதமர் நேரு நேற்று சண்டிகார்டில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

ஜாதி, மொழி, பிராந்திய வாதங்கள்தான் முன்பு நாட்டைப் பலவீனப்படுத்தியது என்று திரு. நேரு கூறினர். இத்தீமைகளை நாட்டிலிருந்து அடியோடு அகற்றவேண்டும் என்று அவர் சொன்னர்.

ஜாதி, மதம், மொழி, பிராந்திய வாதங்கள் இன்று மறைந்து தேசிய ஒற்றுமை பலமடைந்து வருகின்றபோதிலும் ஒற்றுமையைத் தோற்றுவிப்பதில் கண்காணிப்பு அவசியம என்று பிரதமர் நேரு கூறினர்.

பஞ்சாபி சுபாவாக இருந்தாலும் சரி வேறு எதுவாகவிருந்தாலும் அவற்றையெல்லாம் விட இந்திய தேசம் என்பதுதான் முக்கியம் என்று நேருஜி கூறினர்.

பல மொழி பேசும் மக்களும்; பல மதத்தினரும், பல ஜாதியினரும் வாழ்ந்தாலும் இமயம் முதல் கன்னியாகுமரிவரை இந்தியா என்னும் ஒரே தேசம் என்பதை நாம் மனத்திலிறுத்திக்கொள்ளவேண்டுமென்று பாரதப் பிரதமர் குறிப்பிட்டார்.

எந்த மொழியைப் பேசுபவர்களானலும் எந்த மதத்தவரானலும் நல்லெண்ண மனப்பான்மையும் சகிப்புத்தன்மையும் கொண்டிருக்கவேண்டியது அவசியமென அவர் கூறினர்.

பஞ்சாபில் பஞ்சாயத்து ஆட்சி முறையை முறைப்படி ஆரம்பித்து வைத்த நேருஜி பஞ்சாயத்து ஆட்சி முறையினல் கிராமங்களில் சமுக பொருளாதார அபிவிருத்தி ஏற்படுமென்றர். நாட்டின் செழிப்பு கிராமங்களில்தான் தங்கியுள்ளதென்றும் நாட்டின் பொருளாதார சமுக அபிவிருத்திக்கு கிராமங்களே முதல் முயற்சி செய்யவேண்டுமென்றும் பிரதமர் நேரு கூறினர்.

## பாதுகாப்புச் சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

நியுயோர்க், அக். 3

ஐ. நா. பாதுகாப்புசபை நேற்று மீண்டும் கூடியது. ஆனல் வெளி மங்கோலியாவுக்கும் மொரிட்டானியாவுக்கும் ஐ. நா. வில் பிரதிநிதித்துவமளிக்க வேண்டுமென்ற மனுக்கள் மீது எவ்வித முடிவும் செய்யப்படாமல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இருநாடுகளின் ஐ. நா. அங்கத்துவ மனுக்கள் பற்றி தனிப்பட்ட முறையில் இன்னும் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டியிருப்பதால் கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று லைபீரியப் பிரதிநிதி பிரேரித்தார்.

## லாவோசில் கலப்பு அரசாங்கம் உருவாகும்

### வெள்ளிக்கிழமை மூன்று இளவரசர்கள் சந்திப்பு

லண்டன், அக். 3

லாவோசில் கலப்பு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு லாவோசின் மூந்தரப்பு இளவரசர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

லாவோசின் வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன் ஊம், இடதுசாரித் தலைவர் இளவரசர் சுவன்னவாங், நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்ன பூமா ஆகியோர் அடுத்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றனர்.

வெள்ளிக்கிழமைச் சந்திப்பின்போது கலப்பு அரசாங்கத்தின் பிரதம மந்திரியை அவர்கள் தெரிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## சூரியதேவ் உண்ணுவிரதம் முடிந்தது

புதுடில்லி, அக். 2

கடந்த 49 தினங்களாக உண்ணுவிரதமிருந்து வந்த சூரியதேவ், தன் உண்ணுவிரதத்தை இன்று முடித்துக் கொண்டார்.

பஞ்சாபி சுபாக் கோரிக்கைக்காக மாஸ்டர் தாராசிங் உண்ணுவிரதம் ஆரம்பித்ததும் அதை எதிர்த்து சூரியதேவ் உண்ணுவிரதம் ஆரம்பித்தார். இன்று பிற்பகல் பஞ்சாமிர்தம் அருந்தி உண்ணுவிரதத்தை முடித்துக்கொண்டார்.

## ஸிரியாவுக்கு பல நாடுகள் அங்கீகாரம்

புதுடில்லி, அக். 2

புதிய ஸிரியா அரசாங்கத்தை இதுவரை குவட்டமாலா, பார்மோஸா, டுனிஸியா, துருக்கி, ஜோர்டான் ஆகிய நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன. இதே சமயம் ஜனதிபதி நாஸரின் ஐக்கிய அரபுக்குடியரசுக்கும் பல நாடுகள் ஆதரவுதெரிவித்துவருகின்றன.

## செராஜ் கைதானர்

டமாஸ்கஸ், அக். 2

ஐக்கிய அராபியக் குடியரசின் முன்னள் உப ஜனதிபதி கேணல் செராஜ் சிரியாவில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

**மணி வாக்கு**

இயறகை முழுவதும் புனித மடைந்த பின்னர் எமது நினைவுகள் வலிமையடைகின்றன.

—சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 18 உ (4-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## யோகாசனமும் கூட்டுப்பிரார்த்தனையும்

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவரில் சிலர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற சிவானந்தர் ஜயந்தி விழாவில் யோகாசனப் பயிற்சியைச் செய்து காட்டி பலரது பாராட்டுதல்களையும் பெற்றனர். வில் போல் வளையும் உடல் கட்டுடனே கூடிய அம்மாணவர்களைக் கண்டதும், நமது கல்லூரிகளில் எல்லா மாணவ மாணவிகளும் இப்பயிற்சியைச் செய்து இவ்விதம் பொலியக் கூடிய நாள் சீக்கிரம் வரவேண்டும் என்றே தோன்றியது. வித்தியா பகுதியினர் இதில் சிரத்தை காட்டி பல கல்வி ஸ்தாபனங்களிலும் தேகாப்பியாசத்துடன் யோகாசனப் பயிற்சியையும் அளிக்க ஒழுங்கு செய்வது, நமது மாணவ மாணவிகளின் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் உறுதி செய்ய பெரிதும் உதவுவதாக இருக்கும்.

யோகாசனத்தால் பல பல நோய்களையும் மருந்தில்லாமலே குணப்படுத்திக் கொள்ளலாமென்றும், மேற்கு நாடுகளிலும், கிழக்கு நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் யோகாசனம் செய்து தங்கள் உடலை உறுதி செய்து நோயற்ற வாழ்வு வாழ்வதாகவும் சுவாமி சச்சிதானந்தர் அவர்கள் அதே கூட்டத்தில் தெரிவித்தார்கள். எழுபது வயதுக்கு மேலான இந்தியப் பிரதமர் நேரு, தினசரி யோகாசனம் செய்து நோயின்றி, இளமையுடன் வாழ்வதையும், தினசரி 18 மணி நேர வேலை செய்வதையும் பார்க்கின்றோம். ஆகவே, இவ்வித மேலான பயிற்சி பொது மக்களுக்கு கிடைக்க, ஆங்காங்கே யோகாசனபயிற்சி நிலையங்களை நடத்துவது மேலானதோர் ஆக்கப் பணியும் தேச சேவையுமாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமல்லவா?

அதே கூட்டத்தில் நீதி அரசர் டாக்டர் தம்பையா அவர்கள் பேசுகையில் சமயங்கள் பல இருப்பினும் தெய்வம் ஒன்றே என்றும், சமய சமரசம் ஏற்படுத்த சர்வ சமய கூட்டுப் பிரார்த்தனையையும் நடத்த வேண்டுமென்றும் சரியாக அறிவுறுத்தினர். மகாத்மா காந்தியும் சமூக ஒற்றுமைக்காக சர்வ சமய கூட்டுப்பிரார்த்தனையை வகுத்து நடத்தி வந்ததைப் பலரும் அறிவர். அவருக்குப் பின் பாரத நாட்டிலேயே சிற்சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் இவ்வித கூட்டுப் பிரார்த்தனை வெகுவாக நடைபெறவில்லை. இது பெரிய துரதிருஷ்டம். மகாத்மா காட்டிய இந்த வழியை கைக்கொண்டால் மதத்தின் பெயரிலும், சாதியின் பெயரிலும் மக்களிடையே பிளவுகள் ஏற்படாமல், ஒற்றுமையும், சமரசஎண்ணமும் வளரவும் முடியும். இன்று இலங்கை, இந்தியா நாடுகளுக்கு முக்கியமாக வேண்டியது சமூக ஒற்றுமையே. சமூக ஒற்றுமையால்தான் நாடும் மக்களும் முன்னேற முடியும். அதனுல்தான் சமூக ஒற்றுமையை வளர்க்க சர்வ சமய கூட்டுப் பிரார்த்தனையே சிறந்த வழி என்று கண்டு மகாத்மாவும் இதை நடத்தி வந்தார். அதை மறந்து கைவிடாமல் பின்பற்றுவதாயின் அதனுல் நமக்கு மேலான பல நன்மைகள் கிடைப்பது உறுதி.

## உலக மேடை

### சிரியாவில் ராணுவபுரட்சி | நாஸரின் பலவீனம் | பஞ்சாபில் நேருவின்வெற்றி

— டி. எம். எம். —

தென் அமெரிக்கக் குடியரசுகளைப் போலவே மத்தியகிழக்கும் அரசியல் படுகொலைகளுக்கும், ராணுவப் புரட்சிகளுக்கும் பெயர் பெற்றது. சென்ற மாதம் பிரேஸிலில் நடைபெற்ற ஆதிக்க மாற்றத்திற்குப்பின், இப்போது சிரியாவில் புதிய நிலைமை ஒன்று தோன்றியிருக்கிறது. ஐக்கிய அராபியக் குடியரசின் ஆதிக்கத்தை, சிரியாவிலுள்ள ராணுவத் தளபதிகள் எதிர்த்துப் புரட்சி செய்து அந் நாட்டின் ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ராணுவப் புரட்சி நடந்த போதிலும் அங்கு 12 மந்திரிகளைக் கொண்ட சிவிலியன் அரசாங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. முன்னுள் சபாநாயகராகவும், பல அமைச்சர்களுக்குப் பொறுப்பாயிருந்தவருமான குஸ்பாரி பிரதமராகவும், வெளி நாட்டு மந்திரியாகவும், பாதுகாப்பு மந்திரியாகவும் பதவி ஏற்றிருக்கிறர். இன்னும் 4 மாதங்களில் புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதாயும் அறிவித்திருக்கிறர். புதிய சிரிய அரசாங்கத்தை துருக்கி, ஜோர்டான், ஈரான், டுனிஸியா, குவட்டமாலா ஆகிய நாடுகளும் அங்கீகரித்திருக்கின்றன. ஐ. நா. சபையிலும் சிரிய அரசாங்கத்துக்கு ஸ்தானம் கோரி புதிய ஆதிக்கம் விண்ணப்பித்திருக்கிறது. அமெரிக்காவும் அந்நாட்டை அங்கீகரிப்பது பற்றி இப்போது யோசித்து வருவதாய்க் கூறப்படுகிறது. 1958-ம் ஆண்டு சிரியாவிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகளின் சம்மதத்தின் பேரிலேயே சிரியா எகிப்துடன் இணைக்கப்பட்டது. ஆயினும் இவ்வளவு முக்கியமான இணைப்பு விஷயத்தில் மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்குப் பூரணமான வாக்கெடுப்புக்கு அங்கு வழி செய்யப் படவில்லை. அப்போதைய சிரியா மந்திரிசபையின் முடிவைத் தொடர்ந்தும், குறிப்பிட்ட சில வட்டாரங்களின் சம்மதத்தைத் தொடர்ந்துமே இந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டது. எகிப்துடன் இணைந்த பிறகு ஏற்பட்ட ஐக்கிய அரபியக் குடியரசு, இரு நாடுகளுக்கும் பொதுவான முறையில் வகுத்த நிர்வாக ஏற்பாடு, பொருளாதார அபிவிருத்தித் திட்டம் ஆகியன சிரியாவை அதிகம் பாதித்தது என்பதிலும் சந்தேகமில்லை. ஏனெனில் எகிப்தைவிட சிரியா அதிகமான இயற்கைச் செல்வம் பொருந்திய நாடு. இணைப்புக்குப்பின் சிரியாவின் மூலவளங்களில் பெரும் பகுதி எகிப்துக்கும் சேரவேண்டி வந்தால், சிரியாவுக்குக் கிடைத்த பங்கு மிகவும் சொற்பம். மேலும் சிரியப் பிரதிநிதிகளின் குரலுக்கு ஐக்கிய அரபியக் குடியரசில் செல்வாக்கில்லாமல் செய்யப்பட்டதாயும் குற்றஞ் சாட்டப்பட்டது. ஜனாதிபதி நாஸரின் சர்வாதிகாரக் கொடுங்கோன்மையையும், சிரியாவைச் சுரண்டுவதையும் சிரிய மக்கள் சகித்துக்கொண்டிருக்க முடியாது என புரட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர். ஐக்கிய அராபியக் குடியரசில் உப ஜனாதிபதியாகப் பதவிவகித்த சிரியாவைச் சேர்ந்த திரு. செராஜ், ஜனாதிபதி நாஸருடனும், ஐக்கிய அராபியக் குடியரசு மந்திரிகளுடனும் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாகவே விலக வேண்டியிருந்தது.

இதில் மற்றொரு முக்கிய விஷயமும் கவனிக்கத்தக்கது. சிரியாவுக்கும் எகிப்துக்குமிடையே நிலமார்க்கமான தொடர்பு கிடையாது. இரு நாடுகளுக்கும் கடல் மார்க்கத் தொடர்பே உள்ளது. இடையில் லெபனானும், ஈராக்கும் இருக்கின்றன. சிரியாவில் கிளர்ச்சி தோன்றியவுடன் அதை அடக்குமுகமாக ஜனாதிபதி நாஸர் போர்க்கப்பல்களையும் பார சூட்படைகளையும் அனுப்பினர். ஆனல் சிரியர்கள் இப்படைகளை நிர்மூலம் செய்துவிட்டனர். அராபிய மக்கள் தங்களுக்கிடையே சண்டை பிடித்துக்கொண்டு ரத்தம் சிந்துவதைத் தாம் விரும்பவில்லையென ஜனாதிபதி நாஸர் இப்போது கூறுகிறர். இதன் காரணமாக அங்கு சண்டைபோடுவதற்குப் படைகளை இனி அனுப்பப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

**மக்கள் ஆதரவு**

சிரியாவின் நிலைமையைப் பார்க்கும்போது ராணுவப் புரட்சிக்கு மக்களின் ஆதரவு இருப்பதைப் போலத் தெரிகிறது. இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். ராணுவப் புரட்சி அங்கு சிவிலியனின் அரசாங்கத்தை பதவியில் அமர்த்தியிருப்பதும் குறுகிய காலத்திற்குள் அங்கு ஜனநாயகத் தேர்தலை நடத்த [illegible]திய அரசாங்கம் முன்வந்திருப்பதும் முதலாவது காரணம்.

சூயஸ் நெருக்கடியின் போது மாபெரும் மத்திய கிழக்குச் சிங்கமாக விளங்கி, பெரும் வல்லரசுகளுடன் ஈடுகொடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி நாஸர், சிரியாவின் புதிய நிலைமையைக் கண்டும் வெற்றிகரமாகப் பின்வாங்கியிருக்கிறர் என்றே சொல்ல வேண்டும். புதிய புரட்சிக்கு மக்களின் ஆதரவு இருக்கிறதென்பதை ஒரு வேளை அவர் மனதில் கொண்டு செயலாற்றுகிறர் என்றும் சொல்லலாம்.

நில மார்க்கமின்றி கடல் மார்க்கத் தொடர்பு இருப்பதால், பெரிய அளவான ராணுவ நடவடிக்கை எடுப்பதின் மூலமே சிரியக் கிளர்ச்சியை அடக்க முடியும். ஐக்கிய அராபியக் குடியரசை விட்டு சிரியா துண்டித்துக்கொண்டது சட்ட விரோதமா இல்லையா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. பல சுதந்திர அரசாங்கங்கள் சிரியாவின் செயலை ஆதரித்துள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இதே சமயம் ஐக்கிய அராபியக் குடியரசுக்கும் பல நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. 1958-ம் ஆண்டு நடைபெற்ற இணைப்பு சட்டவிரோதம் என சிரியாவில் கருதப்படுகிறது.

**காரணம் என்ன?**

நிற்க; சிரியாவின் புதிய அரசாங்கத்தை இவ்வளவு துரிதமாக துருக்கியும், ஜோர்டானும் அங்கீகரிக்கக் காரணமென்ன? ஒரு விஷயமாகத்தான் இருக்க முடியும். துருக்கியும், ஜோர்டானும் பாக்தாத் ஒப்பந்த நாடுகள். சிரியாவை எகிப்திலிருந்து பிரித்துவிட்டால் மேற்கு நாடுகளுக்கு வலிமை ஏற்படும் என அவைகள் கருதியிருக்கக்கூடும். பின் மெதுவாக சிரியாவை பாக்தாத் ஒப்பந்தத்திலும் சேர்த்துக்கொள்ளலாம். அங்கு வலதுசாரி அரசாங்கம் பதவியிலிருப்பதால் இது தவிர்க்க முடியாததல்ல என்றும் கூறலாம். பிரிட்டனும் சிரியாவை அங்கீகரிப்பதன் மூலம் பாக்தாத் தூண்டிலுக்குள் சிரியாவை வீழ்த்த முயன்றாலும் ஆச்சரியமில்லை. இதே சமயம் துருக்கியும், ஜோர்டானும் வெளித் தூண்டுதலின் காரணமாகவே சிரியாவைத் துரிதமாய் அங்கீகரித்திருக்கின்றன என நம்புவதற்கும் இடமிருக்கிறது. இப்போது மற்றோர் பாக்தாத் நாடான ஈரானும் அந்நாட்டை அங்கீகரித்திருப்பதைக் காண்கின்றேம்.

சிரியா பற்றிய 1958-ம் ஆண்டு ஒப்பந்த உரிமையை ஜனாதிபதி நாஸர் கைவிடாத போதிலும் அவர் போக்கில் பலவீனம் காணப்படுகிறது. நடை முறையில் சிரியா தனிச் சுதந்திர நாடாக இயங்க ஆரம்பித்துவிட்டதென்பது யதார்த்தபூர்வமான உண்மை. அதைப் பல நாடுகள் அங்கீகரித்துவிட்டன என்பதும் உண்மை.

**ஒரு மாபெரும் வெற்றி**

பஞ்சாப் மொழி பேசும் தனி மாகாணம் (பஞ்சாபி சுபா) கோரி, 48 தினங்கள் உண்ணாவிரதமிருந்த 76 வயதான அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் தன் உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டார். இந்த உண்ணாவிரத முடிவு இந்தியப் பிரதமருக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றி எனக் கூறலாம். நேருவின் போக்கை நீண்டகாலமாகக் கவனித்து வந்தவர்களுக்கு இது ஆச்சரியத்தை விளைவிக்காது: சுதந்திரத்திற்குப்பின் நேரு சர்க்காரை மலை

(5ம்பக்கம் பார்க்க)

## ஷோம்பேக்கு ஐ. நா. இறுதி எச்சரிக்கை

எலிஸபெத்வில்லி, அக். கடாங்காவில் பணத்துக்காக வேலைசெய்யும் அந்நிய இராணுவ அதிகாரிகளை கடாங்காவிலிருந்து வெளிவேற்றும்படி ஷோம்பேக்கு ஐ. நா. அதிகாரிகள் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காங்கோவிலிருந்து பணத்துக்காக வேலைசெய்யும் அந்நிய துருப்புக்களும் அந்நிய இராணுவஅதிகாரிகளும் வெளியேற்றப்பட வேண்டுமென்ற பாதுகாப்புச்சபையின் தீர்மானம் கடாங்காவைப் பொறுத்தவரையில் இன்னும் நிறைவேற்றப் படாமலிருப்பதாகவே தான் கருதுவதாக கடாங்காவிலுள்ள ஐ. நா. பிரதமபிரதிநிதி டாக்டர் ஒபிரியன் தெரிவித்தார்.

பணத்துக்காக வேலைசெய்யும் அந்நிய இராணுவ அதிகாரிகளை கடாங்காவிலிருந்து வெளியேற்றுமாறு ஷோம்பேக்கு ஐ. நா. அதிகாரிகள் இறுதி எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும் டாக்டர் ஒபிரியன் தெரிவித்தார்.

திரு. ஷோம்பே இதை நிறைவேற்றத்தவறினல் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள ஐ. நா. வுக்கு உரிமையிருக்கிறதென்று டாக்டர் ஒபிரியன் கூறினர்.

அந்நிய இராணுவ அதிகாரிகள் சம்பந்தமாக திரு. ஷோம்பேக்கு ஐ. நா. அதிகாரிகள் விடுத்துள்ள இறுதி எச்சரிக்கை பற்றி கடாங்காவிலுள்ள அந்நிய தூதுவர்கள் கூடி ஆலோசனை செய்ததாகத் தெரிகிறது.

## ஐயாறன் எழுதுவது

மகாத்மா காந்தியின் ஜயந்தியைக் கொழும்பிலும் வேறு இடங்களிலும் கொண்டாடியிருக்கிறர்கள். ஆனல் யாழ்ப்பாணத்தில் இது நடைபெற்றதாகத் தெரியவில்லை. அதற்குள் நாம் காந்தியை மறந்துவிட்டோமா!

இதைப்பற்றி நான் வருத்தத்துடன் யோசிக்கையில், ஒரு கடிதம் கிடைத்தது. சுண்டிக்குளியிலுள்ள ஒரு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர், அதில் எழுதியுள்ளதாவது:

இன்று அண்ணல் காந்திஜியின் பிறந்த நாள். "ஈழநாட்டை" இன்றுகாலை படித்த பின், எஸ். எஸ். ஸி. மாணவருக்கு (பாஷைப் பாடத்தில்) மகாத்மா யாழ்ப்பாணத்தில் செய்தபிரசங்கங்களைவாசித்து விளக்கினேன்.

'ஐயாறன் எழுதிய நவரத்தினம் மாஸ்டர், காந்தியார் கூறிய சிக்கனத்துக்கு இலக்கியமாக இருந்தார். நல்ல பொருத்தமாகப் போட்டுவிட்டீர்கள். இரண்டையும் இன்று காலை பாடமாகப் படித்தோம். தலையங்கம், அவரது உபந்நியாசங்கள், ஐயாறன் குறிப்பு மூன்றும் சேர்ந்து இன்று காலை என் மாணவர் குழந்தைகளை மலர வைத்த "ஈழநாட்டு"க்கு நன்றி.

"இராமநாதன் கல்லூரியில் அவர் செய்த பிரசங்கத்தை வாசித்தபோது எமது உதவி ஆசிரியை அம்மையார் ஒருவர் அன்று (29-11-27)ல்தான் 9-ம் வகுப்பில் இருந்ததாயும் ஒரு மேசையில் காந்தியார் ஏறி இருந்து பேசினர் என்றும் எமக்குக் கூறினர். இப்படியே இன்று காலை எமது பாடசாலையில் "ஈழநாடு"ம் ஐயாறனும் சமுகமளித்து காந்தி ஜயந்தி விழா 40 நிமிடம் (ஒரு பாட நேரம்) கொண்டாடினர். வாழ்க காந்தீயம்! வளர்க பரஸ்பர அன்பு."

இக்கடிதத்தைப் படித்ததும் எனக்குப் பெரிய ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. மகாத்மாவின் வாழ்க்கையையும் அவர் கூறிய போதனைகளையும் ஞாபகப்படுத்திப் போற்றுவதால் நாம் நேர் வழியில் சென்று, நமது பல இன்னல்களையும் தீர்த்துக் கொள்ள முடியும். அவர் செய்த நன்றியை அதற்குள் மறந்துவிடுவது நமக்கு நல்லதல்ல. ஜனவரி மாதம் 30இல் மகாத்மா உயிர்த் தியாகதினம் வருகிறது. அதையாவது இங்கு கொண்டாட யாராவது ஒழுங்கு செய்வார்களென்றே நம்புகிறேன். காந்தியை மறப்பதால் நஷ்டம் காந்திக்கல்ல. நமக்குத்தான்.

* * *

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் சாக்கோ இம்மாதக் கடைசியில் ஓய்வெடுத்துக் கொண்டு தாய்நாடு திரும்புகிறர். நாற்பது ஆண்டுகளாக யாழ்ப்பாண மக்களுக்காக அரும் பணி ஆற்றிய இந்த உத்தமரான டாக்டருக்கு போதிய கைமாறு செய்ய முடியாதென்றும், தங்கள் நன்றியைத் தெரிவிக்க ஒரு பிரியாவிடை நடத்த வேண்டுமென்றும் சில அன்பர்கள் ஆர்வத்துடன் முன் வந்திருக்கிறர்கள்.

"பணத்தைப் பெரிதாகக் கருதாமல் மக்கள் சேவையே தெய்வப்பணி என்று கொண்டு டாக்டர் சாக்கோ பணிசெய்து வந்துள்ளார். இரவு பகல் எந்நேரத்திலும் அன்புடன் தொண்டாற்றி, யாழ்ப்பாணத்து மக்களின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டார் உத்தம குணத்தவர்; உயர்ந்த கிறிஸ்வர்

"அவரது சேவைகளை எந்த விதத்திலும் பாராட்டி அவருக்கு நன்றி தெரிவிக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசிக்க அவரது அன்பர்களின், கூட்டமொன்று வருகிற 7-ந் திகதி

[ 5-ம் பக்கம் பார்க்க ]

# கடத்தல் கார்என்று பொலிசார் நினைத்திருக்கின்றனர்

## முடிக்குரியவழக்கு தோல்வி

யாழ்ப்பாணம், செவ்வாய்

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலை ரசாயன உத்தியோகத்தர் சின்னத்துரை சுந்தரலிங்கம் என்பவர் கடந்த ஜூலைமாதம் 25-ம் திகதி இரவு 11-45 மணியளவில் ஈ. எல் 305 இலக்கமுடைய மோட்டார் வாகனத்தை கைதடி மானிப்பாய் பிரதான வீதியால் போதிய வெளிச்சமில்லாமலும் பொலிஸ் உடையில் நின்ற பொலிசார் நிறுத்தச் சைகைகாட்டியபோதும் மோட்டாரை நிறுத்தாமல் செலுத்திச் சென்றதாகவும் குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையினால் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் காங்கேசன் துறைப் பொலிசைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் பிரிட்டோ வழக்கை நடத்தினர்.

எதிரிதரப்பில் கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. சுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜராயிருந்தார்.

மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் எதிரியைக் குற்றவாளியல்லவெனக்கண்டு விடுதலைசெய்து தீர்ப்பளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:

எதிரியின் வாக்குமூலம் எனக்கு உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் நடந்த 15 நிமிடங்களின் பின் அவரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலமும் இங்கு அளிக்கப்பட்ட சாட்சியமும் வேறுபாடின்றி ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருக்கின்றன. அவர் சிமெந்து தொழிற்சாலையின்பொறுப்புவாய்ந்தஒரு உத்தியோகத்தர். பொலிஸ்கான்ஸ்டபிள்மார் மோட்டார் வாகனத்தை நிற்பாட்டுமாறு உத்தரவிட்டிருந்தால் நிற்பாட்டாமல் செல்வதற்கு அவருக்குள துவித காரணமும் இருக்கவில்லை. அந்த மோட்டார் வாகனத்தின் சாரதி யார் என்பதை கான்ஸ்டபிள்கள் சரியாக அறிந்திருக்கவில்லை. வடிசாராயம் கடத்தப்படுவதாகத் தகவல் கிடைத்ததைக்கொண்டு இந்த மோட்டார்வாகனத்திலே அது கடத்தப்படுவதாக அவர்கள் முடிவுசெய்துவிட்டனர். இதன் மூலம் குறிப்பிட்ட ஒரு இடத்துக்குளக்காரணத்தைக்கொண்டேனும் இந்த மோட்டாரைக் கொண்டுவரவேண்டுமென அவர்கள் முடிவுசெய்திருக்கிறார்களென்பது நன்றாகத் தெரிகிறது. மோட்டார் வாகனம் பொலிஸ்கான்ஸ்டபிள் வீரசேகராவைக் கடந்துசென்றபோது சாரதியைக் கட்டாயப்படுத்தி குறிப்பிட்ட இடத்துக்கு வாகனத்தைக் கொண்டுவரச்செய்ய பொலிஸ்கான்ஸ்டபிள் காரில் அடித்திருக்கிறாரெனத் தோன்றுகிறது.

இச்சம்பவத்தில் எதிரியின் வார்த்தைகளை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இதிலிருந்து மீட்சிபெற எதிரி உதவிப் பொலிஸ் அதிகாரிக்கு மனுச்செய்து மல்லாகம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்ததைத் தொடர்ந்துமே பொலிசார் இவ்வழக்கை இங்குதாக்கல்செய்திருப்பது பிரத்தியட்சமாகத் தெரிகிறது.

இக்காரணங்களால் முடிக்குரிய வழக்கை நிராகரித்து அதன்படி எதிரியை விடுதலை செய்கிறேன்.

# மதகுருமாருக்கு விசாவரி விலக்கவேண்டும்

## மாநகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்பபாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் அடுத்த மாதாந்தக் கூட்டத்தில் பின்வரும் பிரேரணைகளைக் கொண்டுவர திரு. பீ. எம். யோன் முன்னறிவித்தல் செய்துள்ளாரெனத் தெரிகிறது:-

"சபையினால் அங்கீகரிக்கப்படாத சபைக் காரியதரிசியொருவரை நியமிக்கவேண்டாமென ஸ்தலஸ்தாபனக் கமிஷனுக்கு அறிவிப்பதற்கான அதிகாரத்தை மேயருக்குக் கொடுப்பதெனவும் இது அங்கீகரிக்கப்படாவிடில் அந்தப் பதவியை இல்லாமல் செய்து அதற்குப்பதில் ஈ. சி. சி. இரண்டாம்தர ஸ்தானமொன்றை ஏற்படுத்த வேண்டுமெனவும் இச் சபை தீர்மானிக்கிறது.

"இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டு மதகுருமார்கள், இந்நாட்டு மக்களுக்காக அளப்பரிய சேவைகளையும், எண்ணிக்கையற்ற தியாகங்களையும் செய்தவண்ணம் இருக்கின்றார்கள். இவர்கள் மீது விதிக்கப்பட்ட விசா வரியானது, பொன்முட்டைக்காக வாத்தைக் கொன்ற கதையாக இருக்கின்றது. எனவே, வெளிநாட்டு மதகுருமார்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் இவ் 'விசா வரியை' வாபஸ் பெறுமாறு மத்திய அரசாங்கத்தை இச்சபை கேட்டுக் கொள்ளுகின்றது".

## ஏயர்சிலோன்

### 90 பேர் வேலை நீக்கம்

கொழும்பு, செவ்வாய்

ஏயர் சிலோனைச் சேர்ந்த 90 உத்தியோகஸ்தர்களுக்குவேலை நீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கே. எல். எம். விமானச்சேவையுடன் இருந்த தொடர்பு நிறுத்தப்பட்டதன் காரணமாகவே இவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இலங்கை விமானச் சேவை உத்தியோகஸ்தர் சங்கம், விமானம் ஓட்டுவோர் சங்கம், விமானப் போக்குவரத்துச்சேவை ஊழியர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களும் இதுபற்றி ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

## கிராம சபைகளுக்கு வருமானம் அதிகரிக்கும்

கொழும்பு, செவ்வாய்

கிராம சபைகளுக்கு நிலவரி சம்பந்தமாக அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தினால் இச்சபைகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும் என ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. வி. சி. ஜயசூரியா தெரிவித்தார்.

முன்னர் 50 சதம் வரியாகப் பெற்ற இடத்துக்கு இப்பொழுது ரூ. 2 பெறுவதற்கான அதிகாரம் இச்சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது என நிரந்தரக் காரியதரிசி மேலும் தெரிவித்தார்.

## உலகமேடை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற பல பிரச்சினைகள் எதிர் நோக்கின. ஆயினும் மலைபோல் அவற்றுக்கெல்லாம் ஈடு கொடுத்துக்கொண்டு நின்றார் நேரு. குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் நேருஜி ஒரு தீர்மானத்தை உறுதியுடன் கடைப்பிடித்தாரானால் அதற்கு வரும் எந்த எதிர்ப்பையும் சமாளிக்கத் தயாராகிவிடுவார் என்பதை சுதந்திர இந்தியாவின் பிரதமராக இருந்த காலத்தில் மட்டுமின்றி, சுதந்திர முற்காலத்திலும் கூட வெளிக்காட்டியிருக்கிறார். இந்தியாவில் ஓராண்டுக்கு முன் ஏற்பட்ட ரயில்வே, தபால் ஊழியர்களின் பிரமாண்டமான வேலை நிறுத்தத்தை எவ்வளவு உறுதியுடன் அவர் சமாளித்தார் என்பது, அதற்குத் தூண்டு கோலாக இருந்த கம்யூனிஸ்டுகளையே ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. நேரு அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என அப்போது மனப்பால் குடித்த சீனவும் இதனால் ஏமாற்றமடைந்தது. அதே போல் மாஸ்டர் தாராசிங்கின் உண்ணாவிரதம் அதன் லட்சியத்தைச் சாதிக்கவில்லை என்பது வெளியாகிவிட்டது. இவ்விஷயத்தில் இந்தியப் பிரதமர், தாராசிங்கின் உண்ணாவிரதத்துக்கு முன் கொடுக்க முன்வந்த சலுகைகளுக்கு மேலாக இம்மியும் விட்டுக்கொடுக்கவில்லை. சீக்கியர்கள்மீது பாரபட்சம் காட்டப்படுவதாய்க் கூறப்படும் புகார்கள் பற்றி விசாரணை செய்ய உயர்தரக் கமிஷன் ஒன்றை அமைப்பதாக ஏற்கனவே நேரு கூறியதைத்தான், மாஸ்டர் தாராசிங் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார். தாராசிங் உண்ணாவிரதத்தினால் மரணமடைந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளைச் சமாளிக்கவும் இந்திய அரசாங்கம் பூரண ஆயத்தமாயிருந்தது. அதே சமயம் அவரது உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி தூண்ட பல சமரச முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த சமரச முயற்சி இறுதியில் வெற்றி பெற்றது. நேருவின் உறுதியான தலைமைக்கு இது ஒரு எடுத்துக் காட்டு. பஞ்சாப் விஷயமாக இந்திய அரசாங்கம் காட்டிய போக்கு, இதர மாகாணங்களுக்கும் ஒரு படிப்பினையாகும். மொழிவாரி ராஜ்யப் பிரிவினை இனி இந்தியாவில் இருக்காது என்பதை நேரு செயலளவில் காட்டிவிட்டார். பிரிவினைக் கிளர்ச்சியில் மிகவும் சக்தி பெற்றிருந்தது அகாலிகளின் கிளர்ச்சிதான். எனவே இதர பிரிவினைக்காரர்கள் இவ் விஷயத்தில் இந்திய அரசாங்கத்தின் போக்கு எப்படியிருக்கும் என்பதை நன்கு உணர்ந்திருப்பார்கள்.

# வாழ்க்கைச் செலவுபற்றி 200சங்கங்கள்பேச்சுவார்த்தை

கொழும்பு, செவ்வாய்

200 அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு அரசாங்கத்துக்குத் தாம் எவ்விதம் உதவமுடியும் என்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்த விருக்கின்றனர்.

அரசாங்கம் இவ்வித பேச்சு வார்த்தைக்குச் சம்மதம் தெரிவித்துள்ளதாக, அரசாங்க ஊழியர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. ஐ. ஜே. விக்கிரமா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பிரதம மந்திரியுடனும் நிதிமந்திரி, உணவு, கப்பல் போக்குவரத்து மந்திரி ஆகிய மந்திரிகளுடனும் சங்கங்கள் பேச்சுவார்த்தை நடாத்தும்.

வாழ்க்கைச் செலவு, விலைக் கட்டுப்பாடு, விலை நிர்ணயம், பாவனையாளர் பொருள்கள் இறக்குமதி, புதியவரி விதிப்பு இவைபற்றி பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படும்.

# டாக்டர் சாக்கோ நினைவுச் சின்னம்

## பாராட்டுக் கூட்டத்தில் தீர்மானம்

வட்டுக்கோட்டை, புதன்

"மானிப்பாய் 'கிரீன்' ஆஸ்பத்திரியிலும் மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியிலும் டாக்டர் எம். ஓ. சாக்கோ ஆற்றிய இணையற்ற சேவையை நினைவுபடுத்தும் வகையில் அவரது பெயரில் ஒரு நினைவுச் சின்னத்தை நாம் நிறுவவேண்டும்" என மூளாய் கூட்டுறவு சங்க ஆஸ்பத்திரித் தலைவர் முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை குறிப்பிட்டார்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை சித்தங்கேணி கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற மூளாய் கூட்டுறவுச்சங்க ஆஸ்பத்திரியின் 25 வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், டாக்டர் சாக்கோ சேவையிலிருந்து ஓய்வுபெற்றுத் தாயகம் செல்வது குறித்துப் பேசுகையிலேயே முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை ஜே.பி. மேற்கண்டவாறு கூறினா.

டாக்டர் சாக்கோ யாழ்ப்பாண மக்களுக்கு செய்த சேவையை நினைவுபடுத்தும் வகையில் மூளாய் ஆஸ்பத்திரியில் ஒரு 'வார்ட்' ஒன்றை கட்டுவது உகந்ததாக இருக்குமென முதலியார் சங்கரப்பிள்ளை ஜே. பி. கருத்துத் தெரிவித்தார். முதலியார் சங்கரப்பிள்ளை தெரிவித்த கருத்து சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1959—60-ம் வருடத்தில் ஆஸ்பத்திரியில் கிடைத்த லாபத் தொகை ரூ. 46,258.22ல் ரூ. 20,186.76 வார்ட் கட்டுவதற்கான ஆரம்பவேலைகளைச் செய்ய ஒதுக்கப்படவேண்டுமென கூட்டுறவு ஆஸ்பத்திரியின் நிர்வாக சபையின் புதிய தலைவர் திரு. பி. நடுநாயகம் பிரேரித்தார். இதை சபையினர் ஏகமனதாக வரவேற்று ஆமோதித்தனர்.

ஆஸ்பத்திரியின் 25 வது ஆண்டு நிறைவு விழாவை இவ்வருட இறுதிக்குள் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## உணவுத் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, வெவ்வாய்

சமீபத்தில் அமுலாக்கப்பட்ட செலாவாணிக் கட்டுப்பாட்டு விதிகளினால் அடுத்த வருட முற்பகுதியில் வெளிநாடுகளிலிருந்து வரும் உணவுப் பெருட்களில் அதிக தட்டுப்பாடு ஏற்படலாம் என இறக்குமதியாளரும், இறக்குமதி செய்யும் ஏஜெண்டுகளும் கருதுகின்றனர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறுகிறது. அக்கூட்டத்துக்கு அன்பர்கள் பலரும் வரவேண்டும்" என்று அன்புடன் கேட்டிருக்கிறார்கள்.

டாக்டர் சாக்கோ, யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமல்ல, இங்குள்ள இந்திய மக்களுக்கும் பல்லாண்டுகளாக தந்தைபோலிருந்து பெருந் தொண்டாற்றியிருக்கின்றார். அவர் இவ்வூரை விட்டுச்செல்வதைக் கேட்டு, இங்குள்ள பல இந்தியருக்கும் வருத்தம்.

தக்க முறையில் இப்பெரியாருக்கு நன்றி தெரிவிப்பதால் மற்றவர்களும் அவர் வழியைப் பின்பற்றி தொண்டாற்ற உற்சாகத்துடன் முன்வரலாம். யாழ்ப்பாணத்தவர் இந்தியர் அனைவரும் சேர்ந்து தங்கள் நன்றியை அன்னாருக்கு மேலான முறையில் தெரிவிக்க இது நல்லதோர் வாய்ப்பாகும்.

* * *

மகரிஷி சுத்தானந்த பாரதியார் இம்மாதம் 18-ந் திகதி மலாயாவிலிருந்து கொழும்புக்கு வருகிறார். இலங்கையில் ஒரு வாரம் தங்கியிருப்பாரென்றும், யாழ்ப்பாணத்துக்கு 26-ந் திகதி வந்து ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு, இங்கிருந்து சென்னை திரும்பலாமென்றும் தெரிகிறது.

# நாஸரின் கொள்கைக்கு திரு. நேரு பாராட்டு

ஹைதரபாத், அக். 3

சிரியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பாரதம் கவலைகொண்டுள்ளது என்று பிரதமர் ஸ்ரீநேரு இன்று இங்கு நிருபர்களிடம் கூறினர்.

நாளை மதுரையில் நடைபெறவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் செல்லும் வழியில்ஹைதரபாத் விமானநிலையத்தில் வந்திறங்கிய பிரதமர் நேருவை ஆந்திரா பிரதேச கவர்னரும், முதன்மந்திரி சஞ்சீவையாவும் மற்றும் பலரும் வரவேற்றனர் பின்னர் திரு. சஞ்சீவையா அதே விமானத்தில் மதுரைக்குப் பிரயாணமானர்.

பிரதமர் நேரு நிருபர்களின் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், "சிரியா விஷயத்தில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர் காட்டும் நிதானப்போக்கையும் பிரச்சினைகளுக்கு சமாதானமான முறையில் தீர்வுகாணவேண்டுமென்ற அவரதுகொள்கையையும் பாரதம் பாராட்டுகிறது" என்று கூறினர்.

## செராஜ் கைது செய்யப்பட்டது ஏன்?

### சிரியா தலைவர் விளக்கம்

டமாஸ்கஸ், அக். 3

சிரியாவில் புரட்சி ஏற்படுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன் ஐக்கிய அரபுக் குடியரசு உதவி ஜனதிபதி பதவியை ராஜினமாச் செய்த கேணல் செராஜ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக சிரியா குடியரசின் புதிய தலைவர் திரு. குத்பாரி அறிவித்தார்.

கேணல் செராஜின் பாதுகாப்பை முன்னிட்டே அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளாரென்றும் திரு. குத்பாரி தெரிவித்தார்.

சிரியாவில் நடைபெற்ற புரட்சிக்கும் அமெரிக்காவுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்றும் அமெரிக்கா பற்றி எகிப்து பத்திரிகைகள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையென்றும் அமெரிக்க ராஜாங்க இலாகா அதிகாரியொருவர் கூறினர்.

# ஆசிரியர்சங்க கூட்டத்தில் சிலர் வெளிநடப்பு

## தலைவர் தெரிவினால் ஏற்பட்ட தகராறு

நீர்வேலி, செவ்வாய்

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திங்கட்கிழமை நீர்வேலி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற போது சங்கத்தின் புதிய தலைவராக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் திரு. கே. மகாலிங்கசிவம் தெரிவு செய்யப்பட்டதைத்தொடர்ந்து ஒரு சில ஆசிரியர்கள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்களான திரு. கே. மகாலிங்கசிவம், திரு. எம். சத்தியமூர்த்தி ஆகியோரது பெயர்கள் தலைவர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டன. இரகசிய வாக்குச் சீட்டு மூலம் தெரிவு நடைபெற்றது. இருவரும் தலா 50 வாக்குகளைப் பெற்றனர். இதன்பின் அதிர்ஷ்டச் சீட்டின் மூலம் தெரிவு செய்வதென முடிவு செய்யப்பட்டுஅதன்படி திரு. கே. மகாலிங்கசிவம் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த திரும கே. அருணாசலம் புதிய தலைவரை கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்துமாறு அழைத்தார்.

இந்நிலையில் சமூகமளித்தோர் கையொப்பப் பிரதியில் 76 ஆசிரியர்கள் தாம் கையொப்பமிட்டிருந்தும் 100 பேர் வாக்களிக்கப்பட்டிருப்பதாகவும் சீட்டு மூலம் அவர்கள் அனுமதிக்கப்படவில்லையென்றும் காட்டி இத் தேர்தல் முறையாக நடைபெறவில்லையென சில ஆசிரியர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். கையொப்பத்தைக் கொண்டு சமூகமளித்த ஆசிரியர் தொகையைக்கணிக்க முடியாதெனவும், தலைவர்தேர்தல் முறையாக நடைபெற்ற பின் ஆட்சேபம் காலஞ்சென்று கிளப்பப்படுவதால் ஏற்க முடியாதெனவும் தலைமை வகித்த திரு. கே. அருணாசலம் பதிலளித்தார். இதனை ஆதரித்து அங்கிருந்த பல ஆசிரியர்கள் கூச்சலிட்டனர்.

இந்நிலையில் அழைப்புக்கிணங்க புதிய தலைவர் திரு கே. மகாலிங்கசிவம் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து திரு.எம். சத்தியமூர்த்தி உட்பட சில ஆசிரியர்கள் வெளிநடப்புச் செய்தனர். இக்கூட்டத்தில் எப்பொழுதுமில்லாதபடி பெருந்தொகையான ஆசிரியர்கள் சமூகமளித்திருந்தனர்.

பின்னர் நடைபெற்ற புதுவருட உத்தியோகத்தர் தேர்வின் போது பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. கே. மகாலிங்கசிவம், உப தலைவர் திரு. இ. சங்கரப்பிள்ளை, காரியதரிசி: திரு. பி. செல்வராசா, உதவிக் காரியதரிசி திரு. வி. தர்மலிங்கம், தனாதிகாரி திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம், கணக்குப்பரிசோதகர் திரு. சி. முத்துக்குமாரசாமி.

## கிருஷ்ணன் வெற்றி

புதுடில்லி, அக். 2

இன்று நடைபெற்ற டேவிஸ் கப் டென்னிஸ் போட்டியில் ராமநாதன் கிருஷ்ணன் அமெரிக்காவைச் சேர்ந்த மெக்கின்லீயைத்தோற்கடித்தார். புள்ளி விபரம்: 6-3, 4-6, 1-6, 6-3, 6-4.

## ஜெனிவா கூட்டத்தில் இலங்கையும் கலந்துகொள்ளும்

கொழும்பு, திங்கள்

இந்தியா, இலங்கை, பர்மா உட்பட 19 நாடுகளிலிருந்து தலஸ்தாபன சேவை நிபுணர்கள் அக்டோபர் 15ம் திகதியளவில் ஜெனிவாவில் கூடுவர். சமூகப் பொருளாதார விருத்திக்கெனத் தலஸ்தாபன சேவைகள் பிரிவுபடுத்துவது பற்றிய அறிக்கையொன்றை ஐ. நா. தாபனத்துக்குச் சமர்ப்பிப்பதற்கே பல நாட்டு நிபுணர்களும் ஜெனிவாவில் கூடவிருக்கின்றனர். சுமார் இரண்டு கிழமைகளுக்கு இவர்கள் கலந்தாலோசித்து சமூக விருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவக் கூடிய வகையில் தலஸ்தாபன சேவைகளை எவ்வாறு பிரிவுபடுத்தலாம் என்பதுபற்றி அறிக்கையொன்று தயாரிப்பார்கள்.

# ஆயுள்வேத மசோதா அடுத்தமாதம் அமுலாக்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

புதிய ஆயுள்வேத மசோதா அடுத்த மாதம் அமுலாக்கப்படுமென சுகாதார மந்திரி திரு ஏ. பி. ஜயசூரியா அறிவித்துள்ளார்.

அத்தியாவசிய விதிகள் சில சேர்க்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இந்த மசோதா விரைவில் அமுலாககப்படவில்லை என மந்திரி தெரிவித்தார்.

ஆயுள்வேத மசோதா சம்பந்தப்பட்ட விதிகள் தீர்மானிக்கப்பட்டதும் ஆயுள்வேத சபைக்கு அங்கத்தவர்கள் தேர்ந்தெடுப்பதுபற்றி முடிவு செய்யப்படும். ஆயுள்வேத வைத்தியத்தில் ஈடுபட்டுள்ள சகலரும் தமக்கு இதுவிஷயத்தில் ஒத்துழைப்புத் தருமாறு மந்திரி கேட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு அதிகமான லீவுக்குரிய வைத்தியப் பத்திரம் வழங்க ஆயுள்வேத வைத்தியர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுத்து வருவதாகவும் மந்திரி தெரிவித்துள்ளார்.

## ஆல்டுவஸ்ஹக்ஸ்லி இலங்கை வருகிறார்

கொழும்பு, செவ்வாய்

பிரபல ஆங்கில நூலாசிரியர் திரு. ஆல்டுவஸ்ஹக்ஸ்லி அடுத்த மாதம் இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஹக்ஸ்லி இங்கு இரு வாரங்கள்வரை தங்கியிருப்பார்.

கவி ரவீந்திரநாத் தாகூரின் நூற்றாண்டு நினைவு தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக இந்தியா வரும் திரு. ஹக்ஸ்லி இலங்கைக்கு வருவதற்குத் தாம் விரும்புவதாக தெரிவித்துள்ளார். இவர் இந்தியா செல்லும் போதோ இந்தியாவிலிருந்து திரும்பும் போதோ இங்கு வருவார் எனத் தெரிகிறது.

திரு. ஹக்ஸ்லி 30 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

## நமது நூல் நிலையம்

**மயிலணி முருகவேள் மும்மணிக்கோவை:** ஆசிரியர் சுன்னாகம் கு. முத்துக்குமார சுவாமிப்பிள்ளை; **வெளியீடு** புலவரகம், மயிலணி, சுன்னாகம். **விலை** சதம் 25.

செல்வதும், ஞானமும், கீர்த்தியும் நல்வாழ்வும், கல்வியும் வாய்மையும் அளிக்கும் மயிலணி வாழ் முருகக் கடவுள் மீது தமிழ் மரபு வழிவந்த தமிழ் அறிஞர் திரு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை இயற்றியுள்ள இந் நூல் முருக பக்தர்களுக்கு அரு மருந்து போன்றது.

தொண்ணூற்றாறு பிரபந்தங்களில் மும்மணிக்கோவையும் ஒன்று. வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியப்பா எனும் பாக்களால் அந்தாதித் தொடை மருவ இந்நூல் கோவையாக்கப் பெற்றுள்ளது.

காலஞ் சென்ற பண்டிதர் தென்கோவை உயர் திரு. ச. கந்தையாபிள்ளை அவர்களின் விருப்பத்திற்கேற்ப இந்நூல் ஆசிரியர் முத்துக்குமார சுவாமிப்பிள்ளையால் ஆக்கப்பெற்றுள்ளதென்பதை முகவுரை மூலம் அறிகின்றோம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை, பண்டிதர் கா. நமசிவாயம் ஆகியோர் இந்நூலைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றனர்.

'அன்பே உருவாய் அறு
[குணங் காட்டும்
மூவிரு முகங்களும் மேவி
[ஒன்றாய்க்
கந்தன் என்னுங் கவின்
[பெறு நாமம்
பயின்று விளங்கும் மயிலணி
[முருகனை'

நித்தம் ஏத்திப் பத்தி செய்பவர்களுக்கு இந் நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

* * *

**சூழற் கல்வி ஆசிரியர்கள்:** வ. மகாலிங்கம், திருமதி சத்தியானந்தேஸ்வரி விமலேந்திரன் **வெளியீடு:** ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்; **விலை:** ரூ. 1-50.

பள்ளிக்கூடங்களிற் சூழற் கல்வி ஒரு முக்கியபாடமாக மாணவர்களுக்கு இப்போது போதிக்கப்பட்டு வருகின்றது. சரித்திரம், பூகோளம், குடியியல் என்பனயாவும் சூழற் கல்வியில் அமையும். சமூகத்தைப்பற்றி அறிந்து கொள்வதற்கு சூழற் கல்வி மாணவர்களுக்குப் பெரிதும் உபயோகமாகி வருகின்றது. இத்துறையில் ஆசிரியர்கள் பலர் மாணவர்களுக்கு ஏற்ற நூல்களைத் தமது அனுபவ வாயிலாக எழுதி வருகின்றனர். ஆதிகால இலங்கை தொடக்கம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வரை இந் நூலில் 75 அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. வடமாகாண ஆசிரிய சங்கச் சூழற் பாடவிதானத்தை அடிப்படையாகக்கொண்டு இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பில் நீக்கப்படல் வேண்டும். பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி இந் நூலுக்கு அணிந்துரை வழங்கி நூலாசிரியர்களின் முயற்சிக்கு ஆசி கூறியுள்ளார்.

* * *

**அமுதம்:** ஆசிரியர்: தமிழ் நெஞ்சன், 59, நியூன்ஹாம் ஸ்குயார், கொழும்பு-13; ஆண்டுச் சந்தா ரூ. 4.

தமிழ் அமுதம் உலகெலாம் இனிக்கச் செய்ய 'அமுதம்' பத்திரிகை துணை செய்து வருவதைக் கண்டு இரசிகர்கள் பலர் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றனர். இலக்கியக் கட்டுரைகள், கதைகள், சினிமாச் செய்திகள் யாவும் சுவையாக அமைந்துள்ளன. புகைப் படங்களும் சித்திரங்களும் அழகாக அமைந்துள்ளன.

* * *

**அருந்ததியன்:** சமூக சீர்திருத்த மாதப் பத்திரிகை: 75/37 அப்துல் ஹமீது வீதி, கொழும்பு-12; **தனிப் பிரதி சதம் 10.**

இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் வெளியீடாக 'அருந்ததியன்' தோன்றியுள்ளான். சமூகத்தைச் சீர்திருத்தி நல்வழிப்படுத்துவதற்காக உழைப்பதே இவ் வெளியீட்டின் நோக்கமென்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

## முத்தமிழ் மன்றக் கிளை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், திங்கள்

"உலகத்து மொழிகளில் நம் தமிழ் மொழி உயர்வானது! தகைமையானது!! வள்ளுவர், இளங்கோ, மணிவாசகர் போன்ற மாணிக்கங்களால் செம்மையுற வளர்க்கப் பெற்ற நம் மொழி இடைக்காலத்து இன்னல்களால் சிறிது தளர்வுற்றாலும் இப்போது பழைய நிலையை அடையக் கூடிய அளவில் அதீத வேகத்துடன் வளர்ந்து வருகிறது."

"இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புங்குடுதீவு முத்தமிழ் மன்ற யாழ்ப்பாணக் கிளை அங்குரார்ப்பணத்தின் போது திரு. பொன்கையூர்ப் பர்வதன் கூறினார்.

கூட்டத்திற்கு முத்தமிழ் மன்றச் செயலாளர் திரு. ஐ. சிவசாமி தலைமைவகித்தார்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:-திரு. வே. அ. விஸ்வலிங்கம். செயலாளர்:- திரு. தா. பாலசுந்தரம். தனாதிகாரி:- திரு. கா. சிவராமலிங்கம். நிர்வாக சபை உறுப்பினராக எழுவர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. அ. குழந்தைவேலு நன்றியுரை கூறினார்.

## 16 மணிநேரம் ஊரடங்குச் சட்டம்
### சிரியா அரசாங்கம் நடவடிக்கை

லண்டன், அக். 2

சிரியாவின் புதிய புரட்சி அரசாங்கத் துருப்புக்களுக்கும் சிரியா மக்களுக்கும் சிரியாவின் முக்கிய நகரமான அப்போ என்ற இடத்தில் கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும் அங்கு 16 மணி நேரத்துக்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

சிரியாவில் கலகம் தொடங்குவதற்கு இரண்டு தினங்களுக்கு முன் ஐக்கிய அரபு குடியரசின் உதவி ஜனாதிபதி பதவியை ராஜினாமாச் செய்த கேணல் சிராஜ் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தியை புரட்சி அரசாங்கம் மறுத்துள்ளது. கேணல் சிராஜ் சாதாரணப்பிரஜையாக டமாஸ்கஸில் இருக்கிறாரென்று அரசாங்கம் தெரிவித்தது.

## இருபது ஆண்டுகளாக கலைத் தொண்டு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் ஓரியண்ட் ஸ்போர்ட் நுண்கலைச் சங்கத்தின் 20-வது ஆண்டு விழா சென்ற ஞாயிறன்று நகர மண்டபத்தில், கலைஅரசு சொர்ணலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது.

கலைஅரசு, நாடகத் தமிழுக்குச் செய்துள்ள சேவைகளை நீதிஅரசர் டாக்டர் தம்பையா பாராட்டி, முத்தமிழும் சேர்ந்ததே நாடகக் கலையென்றும் அதை வளர்க்க இச்சங்கம் 20 ஆண்டுகளாகச் செய்யும் முயற்சிகளுக்கு எல்லாம் ஆதரவும் அளிக்க வேண்டுமென்றும் கூறினார். திரு. கே. பி. ஹரன் கலைகளை வளர்கக பெண்கள் அதிகம் முன் வர வேண்டுமென்றார்.

சங்கத்தின் நாடக உதவி டைரக்டரான திரு. செல்வரத்தினத்துக்கு நீதியரசர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

டேபிள்டென்னிஸ் போட்டிப் பந்தயங்களில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பெற்ற பின், செல்வி செல்வநாயகம் வந்தனோபசாரம் கூற விழா "இன்ப நாள்" என்ற நாடகத்துடன் இனிது முடிந்தது.

## பெட்டிச விசாரணை தமிழிலும் நடத்தலாம்

கொழும்பு, திங்கள்

சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் சிங்களத்திலும், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தமிழிலும் பெட்டிச விசாரணைகளை நடாத்தும்படி சுகாதார அமைச்சர் செனட்டர் ஏ. பி. ஜயசூரியா ஓர் அறிவித்தல் விடுத்துள்ளார். கடைப்பிடிக்கக்கூடிய இடங்களிலெல்லாம் இம்முறையைக் கூடியவரை கடைப்பிடிக்கும்படி செனட்டர் ஜயசூரியா கேட்டுள்ளார். தமிழில் விசாரணை நடக்கும் போது அவை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்படல் வேண்டும். ஆங்கிலத்தில் நடாத்தப்பட்டு வரும் விசாரணை விவகாரங்களைக் கூடியவரை சிங்களத்திலும் நடத்துவதற்கு மந்திரி அனுமதியளித்துள்ளார். இவ்வாறான விவகார அறிக்கைகளில் நாதிமார்களின் தின அறிக்கைகள் டி. எம். ஓ, ஜே. எம். ஓ. ஆகியோருக்குப் பொலிஸ் சமர்ப்பிக்கும் அறிக்கைகள், மரண விசாரணை அறிக்கைகள், உணவுகள் மருந்துகளின் சட்ட நிர்வாகம் ஆகியவை அடங்கும்.

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பாளர்கள்:

எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ.
குருநெகல.

## 5 வருடத்தில் துணிப் பஞ்சம் நீங்கும்

மினுவாங்கொடை, திங்கள்

அரசாங்கத்தின் இன்றைய கொள்கையின்படி இன்னும் 5 வருடங்களில் இலங்கைக்குத் தேவையான புடவையை இங்கேயே தயாரிக்கலாம். அப்பொழுது ஓர் அங்குலத் துணி கூட இலங்கை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யத் தேவையில்லை என குடிசைக் கைத்தொழில் டைரக்டர் திரு. எம். எஸ். பெரேரா மரன்டஹகமுலாவில் நடைபெறும் புடவைப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. பெரேரா தொடர்ந்து பேசியதாவது:

கடந்த வருடத்தில் 280,000 சேலைகள் இந்தியாவிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. இங்கு 5,000 சேலைகளே தயாரிக்கப்பட்டன. சேலைகளைத் தயாரிப்பதில் நாம் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

1963-ம் வருடத்தில் 30 லட்சம் யார் துணி தயாரிக்கலாம் என திடமாக நம்பப்படுகிறது. இன்னும் 6 மாதங்களில் இந்தியாவிலிருந்து சாரம் இறக்குமதி செய்வதை முற்றிலும் நிறுத்திவிடலாம்.

கைத்தறி புடவைகளில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடு இத்துறையில் கடமையாற்றும் 25,000 ஊழியரை ஒருவிதத்திலும் பாதிக்காது. இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வேலை வாய்ப்புக்கள் அளிக்க அரசாங்கம் அதிக அக்கறை காட்டிவரும்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**புதன் 4-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கமலா அச்சுதன் - வயலின், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 தேர்ந்தஇசை, 9-30 என். எம். இடைக்காடர் - பேச்சு, 9-45 இலட்சுமிதேவி பாலகிருஷ்ணன் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 கோயமுத்தூர் டி. பி. ஏ. முத்துக்குமாரசுவாமி – வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 சே. சி. காளிதாஸ் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 'விண்ணில் பிறந்தவள்' - நாடகம், 8-00 டி. பி. ஏ. முத்துக்குமாரசுவாமி - வீணை, 8-30 திரைப்படஇசை, 9-15 நல்லுரை, 9-50 இசைமாலை.

# நாவலப்பிட்டி வீரர்கள்

## சுகததாஸா வெற்றிக் கிண்ணம் பெற்றனர்

### நாற்கோண உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

நாவலப்பிட்டி, திங்கள்

கடந்த இரு தினங்களாக நாவலப்பிட்டி மைதானத்தில் நடைபெற்ற நாற்கோண உதைபந்தாட்ட போட்டியில் நாவலப்பிட்டி வீரர்கள் 1-0 கோல் போட்டு முதலாவது பரிசுக்குரிய சுகததாஸா வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டனர். இறுதிப்போட்டியில் நாவலப்பிட்டி வீரர்களுடன் விளையாடிய கம்பளைக் கோஷ்டியினர் கோல்கள் ஒன்றும் போடவில்லை. திரு. இ. எஸ். மாசிலாமணி இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

கண்டி உதைபந்தாட்டச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் போட்டிகள் நாவலப்பிட்டியில் கொத்மலை வீதி மகாவலிகங்கைக் கரையில் ஜெயத்திலக்கா பூங்காவில் நடைபெற்றன. கண்டி, கம்பளை ஆகிய இடங்களில் உள்ள விளையாட்டுச் சங்க உத்தியோகஸ்தர்களும் ரசிகர்களும் இப் போட்டிகளை கண்டு களிப்பதற்காக நாவலப்பிட்டியில் முகாமிட்டிருந்தனர். நாவலப்பிட்டி உதைபந்தாட்டச் சங்கத் தலைவரும் சென். அன்றூஸ் கல்லூரி அதிபருமான திரு. மெரில் பெர்ணண்டோ தலைமையில் நாவலப்பிட்டி வரவேற்புக் கமிட்டியினர் சகல ஒழுங்குகளையும் செய்திருந்தனர். விஷேட பொலிஸ் கோஷ்டியொன்றும் இருதினங்களாக சேவை செய்தன.

நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் திரு. டி.பி. ரணசிங்கா உதைபந்தாட்ட வீரர்களையும் அக் கோஷ்டிகளின் தலைவர்களையும் வரவேற்றார்.

முதல் நாள் நிகழ்ச்சிகள் சனிக்கிழமை மாலை 2-40க்கு ஆரம்பமானது. இப் போட்டியில் கண்டி வைற்ஸ் கோஷ்டியும் நாவலப்பிட்டிக் கோஷ்டியும் விளையாடியதில் நாவலப்பிட்டிக் கோஷ்டியினர் 4-0 கோல்களால் வெற்றியடைந்தனர். கண்டிக் கோஷ்டியினர் கோல்களொன்றும்போடவில்லை. ஜனாப். டி. எஸ். ஜே. பக்கீர் அலி இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

இரண்டாவது போட்டி கண்டி கலர்ஸ் கோஷ்டிக்கும் கம்பளைக் கோஷ்டிக்குமிடையில் மாலை 4-30 மணிக்கு ஆரம்பமானது. இப்போட்டியில் கம்பளை கோஷ்டியினர் 9 கோல்களும் கண்டிக் கோஷ்டியினர் ஒரு கோலும் போட்டனர். இதில் கம்பளை வீரர்கள் 8 கோல்களால் வெற்றியீட்டினர். கதிரேசன் கல்லூரி உடற்பயிற்சி போதனாசிரியர் திரு. எஸ். செல்வராஜ் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

இரண்டாம் நாள் வெற்றிக் கிண்ணப் போட்டியில் இரு கோஷ்டிகளிலும் வெற்றியெடுத்த நாவலப்பிட்டி வீரர்களும் கம்பளை வீரர்களும் பங்குபற்றினர். நாவலப்பிட்டிக் கோஷ்டியினர் ஒரு கோல் போட்டு சுகததாஸா வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர். கம்பளை வீரர்களுக்கு தாலூத் வெற்றிக் கிண்ணம் இரண்டாவது பரிசாக வழங்கப்பட்டது. ஸ்ரீமதி ஆர். எஸ். பெல்பொல பரிசில்களை வழங்கினார்.

நாவலப்பிட்டி உதைபந்தாட்டச் சங்கத்தலைவர் திரு. மெரில்பெர்ணண்டோ பிரதம விருந்தினரான ஸ்ரீமதி பெல்பொலவை வரவேற்றுப் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

மலைநாட்டில் முதல் முறையாக இத்தகையதொரு நாற்கோணப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு பல சமூகத்தவர்களும் மதத்தவர்களும் இன, மத வேறுபாடின்றி ஒத்துழைப்பு அளித்திருப்பது பாராட்டத் தக்கது. அரசியல் கருத்துக்களில் வேறுபட்டிருந்த பலர் இவ் விழாவில் ஒன்றுபட்டுள்ளனர். ஐக்கிய இலங்கையை விரும்புவதே நமது இலட்சியம். வேற்றுமைகளை ஒன்றுபடுத்தும் சக்தி விளையாட்டிற்குண்டு.

நாவலப்பிட்டி வீரர்கள் முதலாவது பரிசிலுக்கான வெற்றிக் கிண்ணத்தை பெறுவதற்கு தகுந்த முறையில் பயிற்சியளித்த திரு. டி. வி. மாரிமுத்து ஆசிரியருக்கு தனது பாராட்டையும் மற்றும் நாவலப்பிட்டி செயலாளர் திரு. எம். எம். ஜெரிவ், கல்லூரி அதிபர்கள், பொக்கிஷதார் திரு. எஸ். வி. ஆறுமுகம், பொலிஸார், பொது மக்கள் ஆகியோருக்கும் நன்றியையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

உதைபந்தாட்டம்

## வெற்றிதோல்வியின்றி முடிந்தது

ஊர்காவற்றுறை, செவ்வாய்

செல்வன் என். ஜெயராசாவைக் காப்டனாகக் கொண்ட பருத்தியடைப்பு 'சன சமூக நிலைய' இளைஞர் கோஷ்டிக்கும் செல்வன் இ. சிவானந்தனைக் காப்டனாகக்கொண்ட சரவணை 'சன சமூக நிலைய' இளைஞர் கோஷ்டிக்குமிடையே சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்த உதைபந்தாட்டப் போட்டி வெற்றிதோல்வி இன்றி முடிவடைந்தது. சரவணையில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. க. மகாதேவன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ஆலயபரிபாலன சபை

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் 'பரிபாலன சபை'யின் மகாசபைக்கூட்டம் தலைவர் திரு. கு. வைரமுத்து தலைமையில் சென்ற வெள்ளிக்கிழமை கோவில் மண்டபத்தில் நடைபெற்றபோது, திரு. நா. நாகேந்திரர் மேற்படி பரிபாலன பஞ்சாயத்து அங்கத்தவர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். திரு. அ. சண்முகரத்தினம் அங்கத்தவர் பதவியை ராஜினாமாச் செய்தமையால் இத்தெரிவு நடைபெற்றது. சபையின் தனாதிகாரியாக திரு. இ. மார்க்கண்டு தெரிவுசெய்யப்பட்டார்.

## புலோலி இல்ல விளையாட்டுப்போட்டி

பருத்தித்துறை, செவ்

புலோலி கிழக்கு அரசினர் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் வட்டார வித்தியாதரிசி திரு. ஏ. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றன.

மொத்த விளையாட்டுக்களில் கூடுதலான புள்ளிகளை எடுத்த பாண்டியன் இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது. பாண்டியன், சோழன், சேரன் இல்லங்கள் முறையே 160, 156, 122 புள்ளிகளைப்பெற்றன.

விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வட்டார வித்தியாதரிசி பரிசில்களை வழங்கிப் பாராட்டினர்.

## சமமாக முடிந்தபோட்டி

மன்னார், திங்கள்

சிற்றம்பலம் வெள்ளிக்கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் நேற்று முருங்கன் விளையாட்டுக்குழுவும் அரசாங்க ஊழியர் விளையாட்டுக் குழுவும் பங்குபற்றியது. இப்போட்டி 2-2 கோல்களால் சரிசமமாக முடிந்தது. திரு. ஜே. எஸ். பொன்ராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

பருத்தித்துறை, செவ்

வராத்துப்பளை சைவ வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கப்பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: த. சிதம்பரப்பிள்ளை, உபதலைவர்: க. கணபதிப்பிள்ளை, செயலாளர்: கே. விஞசித்தம்பி தனாதிகாரி: எஸ் கிருஷ்ண பிள்ளை.


எதிர்பாராத நிகழ்ச்சிகளினின்றும் உங்களைப் பாதுகாக்க



கொழும்பு அஷ்யூரன்ஸ் லிமிடெட்

இலங்கை வங்கிக் கட்டடம் யோர்க் வீதி கொழும்பு 1

மற்றும் எமது அலுவலகங்கள் நாடெங்குமுண்டு

யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனம்:

கொழும்பு அஷ்யூரன்ஸ் லிமிட்டெட்,

முதலாம் மாடி, 'ராஜா கட்டிடம்'

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தனியூற்று**

# கொலை நடந்த ஸ்தலத்துக்கு நீதியரசர் விஜயம்

## விசாரணை இன்றும் தொடர்ந்து நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்வாய்
தற்போது நடைபெற்று வரும் தனியூற்று கொலைவழக்கு சம்பந்தமாக சம்பவம் நடந்த இடத்தை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா, ஜூரிகளுடனும், வழக்கறிஞர்களுடனும், எதிரியுடனும் சென்று பார்வையிட்டபோது பெருந்தொகையான மக்கள் அங்கு கூடியிருந்தனர்.

இவ் வழக்கில் தனியூற்று மாமூலைச் சேர்ந்த செல்லப்பா செல்லத்துரை என்பவர், வத்தப்பழையைச் சேர்ந்த மரியாம்பிள்ளை கந்தசாமி என்பவரை 1960-ம் ஆண்டு ஜூன் 7-ந் திகதி கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

முடிக்குரியதரப்பில் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். திரு. எஸ். கே. திரவியநாயகத்தின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம், திரு. டி. கனகசிங்கம் ஆகியோர் பிரதிவாதியின் சார்பில் ஆஜராகினர்.

பிரதிவாதியின் சீனியர் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கத்தின் வேண்டுகோளின்மீது, கொலைநடந்த ஸ்தலத்துக்கு விஜயம்செய்ய நீதியரசர் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து 86 மைல் தூரத்திலுள்ள கொலை செய்யப்பட்ட ஒரு ஸ்தலத்துக்கு சுப்ரீம்கோர்ட் நீதியரசர் ஒருவர் விஜம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

மேல் விசாரணை நாளை நடைபெறும். முடிக்குரியதரப்பில் பிரதான சாட்சியும், தனியூற்றைச் சேர்ந்த வியாபாரியுமான சுப்பர் வல்லிபுரம் அப்போது குறுக்குவிசாரணை செய்யப்படுவார்.

## "வித்துவான் புலவர் சம்பள விகிதம்"

தெல்லிப்பழை, செவ்வாய்
"ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கப் பண்டித பட்டதாரிகள் சம்பள விகிதத்தைப் போல இந்திய சர்வகலாசாலைகளில் பட்டம்பெற்ற வித்துவான், புலவர் பட்டதாரிகளுக்கும் சம்பளம் வழங்கப்படவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் ஒன்று திங்கட்கிழமை மாலை அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெற்ற வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு. எஸ். சிவவாகீசர் இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். 'வித்தியா பகுதியின் முகாமைக்குரிய பாடசாலைகளில் இருக்கும் ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாக மாற்றப்படும் போது அம்மாற்றத்தை ஏற்க மறுக்கும் பத்து வருட சேவை பூர்த்தியான ஆசிரியர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து இளைப்பாறுவதற்கு அரசாங்கம் வகை செய்யவேண்டும்" என்னும் தீர்மானமும் நிறைவேறியது.

---

## மதுரையில் நேருஜி

மதுரை, அக். 3
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்பொருட்டு பிரதமர் நேரு இன்று பிற்பகல் மதுரை வந்துசேர்ந்தார். அங்கு அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.


மகத்தான 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)
நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்

சிவாஜி கணேசன் - பத்மினி
நடித்த
அமர தீபம்

Monday to Thursday 2-nd to 5-th 4-30 p.m.
ONE FOOT IN HELL


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## 'சாப்புச் சட்டத்தை அமுல் நடத்துக' வர்த்தக சிப்பந்திகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்
'தொழில் கமிஷனரை நாம் பேட்டி கண்டபோது யாழ்ப்பாணத்தில்போதிய சாப்புச் சட்ட பரிசோதகர்கள் இல்லையென அவர் எமக்குத் தெரிவித்தார். இதை நிவர்த்திசெய்யும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு தொழில் மந்திரியையும் ஏனைய அதிகாரிகளையும் கேட்டுவருகின்றோம்.'

இவ்வாறு வட இலங்கை வர்த்தக ஸ்தாபன சிப்பந்திகள் சங்கத்தின் விஷய ஆலோசனை நிர்வாகக் கூட்டத்தில் பேசுகையில் காரியதரிசி திரு. எஸ். நடராஜா கூறினர்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. சாப்புச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்துமாறு கேட்கும்பொருட்டு யாழ்ப்பாண தொழில் உதவிக்கமிஷனரைப் பேட்டிகாணுதல்.

2. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வர்த்தக ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் சிப்பந்திகள் எல்லோரையும் சங்கத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

கூட்டத்துக்கு எஸ். செல்வராசன் தலைமைவகித்தார்.

---

## ஜேர்மன் சமாதான ஒப்பந்தம்

பிராக், அக். 3
ஜேர்மனி சம்பந்தமாக ஒரு சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு மேற்கு நாடுகள் ஒப்புக்கொள்ளாவிட்டால் கிழக்கு ஜேர்மனியுடன் தாங்கள் தனியாக ஒரு சமாதான ஒப்பந்தத்தை இவ்வருட முடிவுக்குள் செய்துகொள்ளப் போவதாக போலந்தும் செக்கோஸ்லவாக்கியும் ஒரு கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

---

## கல்லூரி முகாமையாளர் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்ய முடிவு

நீர்வேலி, செவ்வாய்
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி முகாமையாளராக விருந்து அண்மையில் அகால மரணமெய்திய முதலியார் அத்தியார் அருணசலத்தின் திருவுருவப்படத்தை அக்கல்லூரியில் மிக விரைவில் திரைநீக்கஞ் செய்து வைப்பதென கல்லூரி பழைய மாணவர் சங்கம் முடிவு செய்துள்ளது.

கல்லூரி அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் தலைமையில் இக் கூட்டம் நேற்று கல்லூரியில் நடைபெற்றது.

அத்தியார் அருணசலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

---

## கலைவாணி கழகம் அங்குரார்ப்பணம்

காங்கேசன் துறை, திங்கள்
காங்கேசன் துறையில் கலைவாணி கழகத்தின் அங்குரார்பனக் கூட்டம் திரு. பீ. செல்வராசா தலைமையில் நடைபெற்றது. எதிர் வரும் நவராத்திரி விழாவன்று ஓர் நாடகம் நடாத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட பின், கீழ்க்கண்டோர் சங்கத்தின் புது வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. ஜி. எஸ். வசந்தகுலசிங்கம், வி. பொன்னம்பலம், சி. இ. குணரத்தினம். தலைவர்: திரு பெ. பூதப்பிள்ளை. உபதலைவர்: திரு. தி. மயில்வாகனம். இணைக் காரியதரிசிகள்: திரு, சி. செல்வராசா, திரு. தி. செல்வராசா. தனதிகாரன்: திரு. செ. சோதிராசா.

# கணவனைப்பிரிந்து வாழ்ந்த பெண் வறுமையால் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்வாய்
வாழ்க்கைச் சூழலுள் சிக்குண்டு கணவனைப் பிரிந்து தாயுடன் வறுமையில் வாழ்ந்த ஒரு பெண் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்துகொண்டார்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை பொன்னம்மா (வயது 30) வின் மரணம் சம்பந்தமாகத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ்.கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் தாயாரான திருமதி மாணிக்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இறந்தவர் 12 வருடங்களுக்கு முன் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. கடந்த 3 வருடங்களாக அவர் கணவனைப்பிரிந்து என்னுடன் வாழ்ந்துவந்தார். அவர் வறுமையால் பாதிக்கப்பட்டிருந்தார். 'இந்த உலகத்தில் வாழ்வதால் எதுவித பயனுமில்லை. மடிவதே மேல்' என்று அவர் அடிக்கடி சொல்லிவந்தார். எட்டு மாதங்களுக்கு முன்பும் இருதடவை நஞ்சருந்தித் தற்கொலை செய்ய முயன்றபோது அதிலிருந்து தடுக்கப்பட்டார்.

நேற்று மாலை 5 மணிக்கு சமையலறைக்குள் சென்றார். "குஞ்சியம்மா குஞ்சியம்மா" என்ற அவலக்குரல் கேட்டது. சென்று பார்த்தபோது கதவு பூட்டப்பட்டிருந்தது. திறந்து உள்ளே சென்றதும் அவர் ஆபத்தான நிலையில் கிடந்தார். விதானையாரைக் கூட்டிக் கொண்டு கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அவர் இறந்துவிட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

டாக்டர் எஸ். வேலும்மயிலும் பிரேத பரிசோதனை நடத்தினர். அவர், நஞ்சருந்தியதால் மரணம் சம்பவித்ததெனத் தெரிவித்தார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

---

## தங்கச் சங்கிலியை பறித்துச்சென்றதாக வழக்கு

மாவிட்டபுரம், செவ்வாய்
மயிலிட்டியைச் சேர்ந்த திருமதி மீனாட்சிப்பிள்ளை கந்தையா என்பவருடைய தங்கச் சங்கிலியை அவருடைய கழுத்திலிருந்து அறுத்து எடுத்துச் சென்றதாக அதே ஊரைச் சேர்ந்த திருமதி கோதி கதிரன் என்பவரைச் சந்தேகத்தின் பேரில் காங்கேசன் துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் சந்தேக நபரை 250 ரூபா பிணையில் விடுதலை செய்து அக்டோபர் 13 ம் திகதி கோர்ட்டிற்கு வரும்படி உத்தரவிட்டார்.

## மரணவிசாரணை அதிகாரி வீட்டில் திருட்டு

மாவிட்டபுரம், செவ்.
வலி வடக்கு மரணவிசாரணை அதிகாரி திரு. என். பூதப்பிள்ளையின் வீட்டில் இனம்தெரியாத நபர்கள் ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டினுள் பிரவேசித்து 270 ரூபா ரொக்கத்தையும், ரூ.3000 பெறுமதியான தாலிக்கொடி, 4 சோடி காப்பு, பதக்கம் இணைக்கப்பட்ட சங்கிலி முதலியவற்றையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.

---

## நவீன முறையில் புகையிரத சேவை

கொழும்பு, செவ்வாய்
புகையிரத சேவை நவீன முறையில் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. வர்ணவெளிச்சங்களைக் கொண்டதும், விரைவானதுமான புகையிரதங்களைச் சேவைக்கு விட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கனடா அளித்த 2 டீசல் என்ஜின்களும் மலைநாட்டுப்பகுதியில் இப்போது சேவைக்கு விடப்பட்டுள்ளன.

---

## நவம்பர் 6-ல் நேரு-மாக் சந்திப்பு

லண்டன், அக்.
இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு நவம்பர்மாதம் 5-ம் திகதி லண்டன் வந்துசேர்வார். அடுத்த நாள் அவர் பிரதமர் திரு. மாக்மில்லனுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு, 7-ம் திகதி அமெரிக்காவுக்குப் புறப்படுவார்.

---

## நியூயோர்க்கில் வானவெளி மகாநாடு

நியூயோர்க், அக் 3
வானவெளி சம்பந்தமான சர்வதேச மகாநாடு ஒன்று நாளை நியூயோர்க்கில் நடைபெறும். 26 நாடுகளைச் சேர்ந்த 500 விஞ்ஞானிகள் இம்மகாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

---

## யாழ்ப்பாணத்தில் சர்க்கஸ் காட்சி

யாழ்ப்பாணம், புதன்
ஹயர் ஸ்டடீஸ் கல்லூரியின் ஆதரவில் நடைபெறும் சர்க்கஸ் காட்சியை நேற்று மாலை யாழ்ப்பாண மாநகரசபை மேயர் திரு. டி. எஸ். துரைராஜா திறந்துவைத்தார். சில பெண்கள் உள்ளிட்டு பலர் செய்யும் சாகச் செயல்களும் விளையாட்டுகளும் குறிப்பிடத்தக்கன.

# இலங்கை வர்த்தகர்கள் காட்டும் அசிரத்தை

## வர்த்தக கமிஷனர்கள் தெரிவிக்கும் புகார்

கொழும்பு, செவ்வாய்
வெளிநாடுகளிலுள்ள இறக்குமதியாளர்களுக்குச் சாமான்களை அனுப்புவதில் இலங்கையிலுள்ள வர்த்தகர்கள் காட்டும் அசிரத்தையும், தாமதமும் இலங்கையின் வெளிநாட்டு மார்க்கெட்டுக்கு ஆபத்தை உண்டுபண்ணும் என வெளிநாட்டிலுள்ள இலங்கை வர்த்தக கமிஷனர்கள் இங்குள்ள வர்த்தக இலாகாவுக்குப் புகார் கூறியுள்ளனர். ஒப்பந்தத்தைச் சரியானபடி அவர்கள் நிறைவேற்றுமாறு பார்த்துக் கொள்ளுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

## போஸ்ட் மாஸ்டர்களுக்கே தெரியவில்லை!

கொழும்பு, செவ்வாய்
15 ரூபாய், 20 ரூபாய் பெறுமான போஸ்டல் ஆர்டர்கள், நேற்றைய வைபவத்தின் போது விநியோகிக்கப்பட்ட செய்தி கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலுமுள்ள போஸ்ட் மாஸ்டர்களுக்குத் தெரியாதென்றும் வானொலிச் செய்திகள்மூலமே அவர்கள் இதை அறிந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.